விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 26 ஞாயிற்றுக்கிழமை (11.08.2002) தொலைபேசி 3378 ஒலி 235






யாழ். நகரில் மூடப்பட்ட வீதிகளை திறக்கக்கோரி நேற்று இடம்பெற்ற மறியல் போராட்டத்தின் சில காட்சிகள்...

## அரசியல் நெருக்கடிக்கு முடிவுகட்ட
# பிரதமர் ரணில் 14ந் திகதி ஜனாதிபதியை சந்திப்பார்

(நமது நிருபர்)

**ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்குமிடையே அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள அரசியல் முறுகல் நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியை எதிர்வரும் 14ந் திகதி புதன்கிழமை நேரில் சந்தித்துப் பேசவுள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தானதை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல் நிலையானது

ஆடம்பரக் கார் கொள்வனவு, கைப்பை விவகாரம் ஆகியனவற்றுடன் வலுவடைந்திருந்தது. இந்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் 14ந் திகதி புதன்கிழமை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான

பிவைத்துள்ளார்.

பிரதமர் அனுப்பிய கடிதத்திற்கு ஜனாதிபதியிடம் இருந்து நேற்று வரை சம்மதக் கடிதம் கிடைக்காது போனாலும் இருவரது சந்திப்பும் 14ம் திகதி இடம்பெறுமென அரச

## சுசந்திகாவுக்கு தங்கப்பதக்கம்

(கொழும்பு)

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறும் 14ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் சுசந்திகா ஜெயசிங்க நேற்று இலங்கைக்கான முதலாவது தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தை சுசந்திகா 11.29 செக்கனில் ஓடிமுடித்து தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார். சீனாவைச் சேர்ந்த வீராங்கனை கிங்லொங்சுயிங் 11.56 செக்கனில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

(ந-5)

## பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் இணைந்து செயற்பட முடிவு

(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினையில் பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்து செயற்படுவது என்ற இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து பிளவுபடுத்துவதை தடுப்பது, சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மாற்றுவழி ஒன்றை ஏற்படுத்துவது ஆகிய விடயங்களில் இரு கட்சிகளும் இணைந்து முடிவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் விடுதலைப்புலிகள் சில ஆயுதங்களை யாவது அரசிடம் கையளிக்க வேண்டும்.

(10ம் பக்கம் பார்க்க)

இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

அரசாங்கம் விடுதலைப்புலிகளு டன் சேர்ந்து பிளவுபடுத்துவதை தடுப்பது, சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மாற்றுவழி ஒன்றை ஏற்ப

அத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் விடுதலைப்புலிகள் சில ஆயுதங்களை யாவது அரசிடம் கையளிக்க வேண் டும்.

(10ம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்க புலிகளுடன் அரசு பேசிவருகிறது!

## பிரதமர் ரணில் கண்டியில் தெரிவிப்பு

(கண்டி)

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்கும் இடையே இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பது தொடர் பாக அரசு விடுதலைப்புலிகளுடன் பேசிவருகின்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று கண்டியில் இடம்பெற்றுள்ள வைபவ மொன்றில் பேசும்போது குறிப்பிட் டுள்ளார்.

அரசாங்கத்தின் நூறு நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டி யில் உள்ள கிராமம் ஒன்றில் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப் பட்ட வீதி ஒன்றைத் திறந்து வைத் துப் பேசினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசு கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரப் போக்குவரத்து குறித்து இன்று முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பஸ் நிலையத் தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற விபத்து தொடர்பாகவும் வருங்காலத்தில் இத்தகைய விபத் துகள் இடம்பெறாமல் தடுப்பதற் குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10மணிக்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத் திலிங்கம் தலைமையில் யாழ். செய லகத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது யாழ். நகரில் வாகனப் போக்குவரத்து நெரிசல் பெருமளவு காணப்படுவதனால் பஸ் நிலையப் பகுதியில் ஆங்காங்கே தரித்து நிற் கும் மினிபஸ்கள், ஓட்டோக்கள் என்பவற்றை நிறுத்துவதற்கு வசதி யான ஒரு இடத்தை தெரிவு செய் வது பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

(10ம் பக்கம் பார்க்க)

அரசுக்கும் விடுதலைப்புலிக ளுக்குமிடையே யுத்தநிறுத்த புரிந்து ணர்வு உடன்படிக்கை கைச்சாத்தா னதை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் அரசுக்கும் இடை யில் ஏற்பட்ட விரிசல் நிலையானது.

கைப்பை விவகாரம் ஆகியனவற்று டன் வலுவடைந்திருந்தது. இந்நிலை யில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் 14ந் திகதி புதன்கிழமை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான நேரம் குறித்து கடிதம் ஒன்றை அனுப்

பிரதமர் அனுப்பிய கடிதத்திற்கு ஜனாதிபதியிடம் இருந்து நேற்று வரை சம்மதக் கடிதம் கிடைக்காது போனாலும் இருவரது சந்திப்பும் 14ம் திகதி இடம்பெறுமென அரச

(10ம் பக்கம் பார்க்க)

# மூடப்பட்ட வீதியை திறக்கக்கோரி நேற்று பெரும் மறியற் போராட்டம்

## படையினரின் போக்குவரத்து ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தி மற்றும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதிச் சந்தி ஆகிய இரு நகரமையங் களில் நேற்று இடம்பெற்ற மறியல் போராட்டத்தினால் படையினரின் போக்குவரத்து உட்பட பொதுப் போக்குவரத்தும் ஸ்தம்பித்தன.

ஏழு வருடங்களாக மூடப்பட் டிருக்கும யாழ் ஆரியகுளம் சந்தி மற்றும் ஆஸ்பத்திரி வீதிச்சந்திக்கு இடையே இராணுவ முகாம்கள் ஊடாக செல்லும் பருத்தித்துறை வீதியை மக்கள பாவனைக்கு திறந்து விடுமாறு கோரியே இம்மறியற் போராட்டம் இடம்பெற்றது.

முற்பகல் 10மணிக்கு வலி தென் கிழக்கு பொதுஜன அமைப்புக்களின ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமான இப் போராட்டத்தில் ஒன்றியத்தலைவர் சிவிகே.

(10ம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 3 பாடசாலைகள் இயங்க அனுமதி

## யாழ். மேலதிக அரச அதிபரிடம் நேற்றுகையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் அதி உயர் பாது காப்பு வலயத்தில் உள்ள மூன்று பாட சாலைகள் மீண்டும் செந்த இடத்தில இயங்குவதற்கான அனுமதிக்கடி தத்தை பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத் திலிங்கத்திடம் நேற்றுக் கையளித் துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல் லூரி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி ஆகிய மூன்று பாடசாலைகளே சொந்த இடத்தில் இயங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைததிலிங்கத்திடம் அனுமதிக் கடிதம் வழங்கும் வைபவத்தில்

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்புவரை சிறந்த ஆசிரியர்கள். வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன், ஆங்கிலத்தில் கூடிய கவனம், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.

(5715)

## ஆடிப்பூரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருந்தளைப் பதிஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஆடிப்பூரம் பூச்சொரிதல் விழா இடம்பெறவுள்ளது.

★

யாழ். கந்தர்மடம் செல்வநாசபூஷணி அம்பாள் திருக்கோவிலில் இன்று ஆடிப்பூரத் திருவிழா இடம்பெறவுள்ளது. (உ)

## மீனவர் ஓய்வூதியத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

கடல்தொழில் திணைக்கள மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில், தம்பாட்டியைச் சேர்ந்த 35 மீனவர்கள் ஒரே நாளில் இணைந்துள்ளனர்.

(உ-75)

## விளையாட்டு போட்டி

(ஏழாலை)

அளவெட்டி கணேஸ்வரம் விநாயகர் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் க.கருணாநந்தன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-12)

●

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையத்தில் இயங்கும் பாலர் கல்வி நிலையத்தின் விளையாட்டுப் போட்டி இன்று பி. ப 2 மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் சு. நடராசலிங்கம் பிரதம விருந்தினராகவும் வீடியோ விமல் ஸ்தாபனத்தின் உரிமையாளர் ச. குலேந்திரன் சிறப்பு விருந்தினராகவும், கொட்டடி கிராம அலுவலர் தி. மகாலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொளளவுள்ளனர். (இ)

●

(மானிப்பாய்)

வலி தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் சங்கானை இந்து இளைஞர் மன்ற சிறுவர் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல்1.30 மணிக்கு சங்கானை சிலம்புப் புளியடி ஆலய முன்றலில் மன்றத்தின் தலைவர் வி. செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டைத் தெகுதி ஈ.பி.டி.பி கட்சியின் அமைப்பாளரும் வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவருமான வே. மகேந்திரனும, கௌரவவிருந்தினர்களாக கல்வித்திணைக்கள சமய கலாசார உத்தியோகத்தர் சைவப் பிதா பொன் சாம்பசிவம், பிரதேச சபையின் செயலாளர் திருமதி சா. சிவானந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன் சிறப்பு நிகழ்ச்சியாக இன்று காலை பரதன் ஓட்டப்போட்டியும் நடைபெறவுள்ளது. (இ-232)

## ஆன்மீக விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொல்கொத்தா இராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ஆத்ம பிரியானந்த செப்ரெம்பர் மாதத் தொடக்கத்தில் யாழ்ப்பங்ணத்துக்கு ஆன்மீக விஜயம் செய்யவுள்ளார்.

இவருடன் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி ஆத்ம கணானந்தாவும் வருகை தரவுள்ளார்.

இவர்கள் யாழ். குடநாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற சமயத் தலங்களுக்குச் சென்று கருத்தரங்குகள் சொற்பொழிவுகளை நடத்தவுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி பி ப 2.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இவர்களின் கருத்துரை இடம்பெறவுள்ளது. (உ-19)

# அரசு களியாட்ட நிகழ்வுகளை நடத்துவது விசனத்துக்குரியது

## புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆதங்கம்

(கொழும்பு)

நாட்டில் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச்செல்லும் இவ்வேளையில், அரசு பெரும்செலவில் கண்காட்சிகளையும், களியாட்டங்களையும் நடத்திவருவது விசனத்துக்குரியதென ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் த. சித்தார்த்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

களியாட்டங்களும், கண்காட்சிகளும் தமிழ்மக்களுக்கு புரியாத புதிராகவேயுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட போரால் நொந்துபோயுள்ள தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கும், இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாணப்படாமல் இது போன்ற நாடகங்களை தமிழ் மக்கள் மீது திணிப்பது, அம்மக்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளாது இருக்கும் சிங்கள ஆட்சியாளர்களின் மனப்போக்கை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களில், தமிழ் மக்களையும் இணைத்துக் கொள்ளக்கூடிய வகையில் அரசியல் உட்கட்டுமானங்களை ஏற்படுத்துவதே தற்போதைய தேவையாக உள்ளதென்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-8)

## க.பொ.த(உ|த) பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில்புத்தூர்ஸ்ரீ சோமஸ்கந்தக்கல்லூரியின் முன்னணிப்பெறுபேறுகள்வருமாறு;

வர்த்தகம்

க. முரளிதரன் 3ஏ. ந. லோகிதன் 2 ஏ பி, ஸ்ரீ.சிவசுந்தரம் 2 ஏ.சி,

கலை

ம ஜனார்த்தனா 3 ஏ, செ விஜிதா 2ஏ பி, மு. ரூபநிதி 2ஏ பி, இ. தங்கேஸ்வரன் 2ஏ பி, சி. ஹேமகலா 2ஏ பி,

கணிதம்

து சுபேர்தன் ஏ ?சி. இதைவிட கலைப்பிரிவில் ஏ 2பி (5 பேர்) ஏ பி சி (5 பேர்) பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். (ந-5)

## ஆசியமெய்வல்லுநர்போட்டி முதலாவது தங்கப் பதக்கம் சீனா வீராங்கனைக்கு

(கொழும்பு)

சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் முதலாவது தங்கப்பதக்கத்தை சீனா வீராங்கனை யூயு வாசிங் பெற்றுள்ளார்.

இவர்குண்டெறிதல் போட்டியில் முதலாவது இடத்தை பெற்றுள்ளார்.

இப்போட்டியில் தாய்வான் வெள்ளிப்பதக்கத்தையும் இந்தியா வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுள்ளது. (உ-8)

## புத்தளம் சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் கைது

### மூவர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

புத்தளம் சிறைச்சாலையில் இருந்து கடந்த வியாழக்கிழமை 7 கைதிகள் தப்பி ஓடியது குறித்து, இரு சிறைச்சாலை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும் நேற்று புத்தளம் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இதற்கிடையில் மேலும் 3 சிறைச்சாலை அதிகாரிகள் பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையிலிருந்து கைதிகள் தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டும், இடைநிறுத்தி வைக்கப்பட்டும் உள்ளனர்.

(உ-8)

## மீளக் குடியமர்ந்த 406 குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். உதவி

(காரைநகர்)

வன்னிப்பெருநிலப்பரப்பில் இருந்து அண்மையில் காரைநகரில் மீளக்குடியமர்ந்த 406 குடும்பங்களுக்கு யு. என்.எச். சி. ஆர் நிறுவனம் ஒரு தொகுதி வீட்டுப் பாவனைப் பொருட்களை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியது.

கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக இவ் வமைப்பினர் நேரடியாகச் சென்று இப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

கரைநகர் மேற்கு கிராம சேவையாளர்பிரிவில் 28 குடும்பங்களிற்கும்காரைநகர் வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவில் 6 குடும்பங்களுக்கும் காரைநகர்கிழ. கிராமசேவையாளர்பிரிவில் 86 குடும்பங்களுக்கும், காரைநகர் தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் 18 குடும்பங்களுக்கும், காரைநகர் தென்கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 127 குடும்பங்களுக்கும் காரைநகர் தென்மேற்கு கிராமசேவையாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும், காரைநகர்வடக்குகிராம சேவையாளர் பிரிவில்14குடும்பங்களுக்கும் காரைநகர் வடகிழக்கு கிராமசேவையாளர் பிரிவில் 49 குடும்பங்களுக்கும் காரைநகர்மத்தி கிராமசேவையாளர் பிரிவில் 56 குடும்பங்களுக்கும் இப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்வோரின்எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதனால் தொடர்ந்தும் இவ்உதவிகள்வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

(உ-246)

## மனித உரிமை மீறல்கள் உடன் விசாரிக்கப்படும்

### ஆணைக்குழுப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணைக்குழுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் 50 ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவற்றை உடனடியாத் தீர்த்து வைக்கும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் எதிர்நோக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உடனுக்குடன் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்காக 689064 என்ற தொலைபேசியூடாக 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு மனித உரிமை மீறல் சம்பந்தமான தகவல்களைத் தெரிவிக்க முடியும் என்றும் மனித உரிமை அணைக்குழுப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-5)

## மக்கள் நலன்புரிச் சங்கத்தின் 5-வது முதலுதவிப் படையணி நேற்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன் புரிச்சங்கத்தின் விசேட முதலுதவிப் படையணியின் 5வது பிரிவின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் இ சற்குருநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அ. விநாயகமூர்த்தி எம்.கே சிவாஜிலிங்கம் மற்றும் மூவின் ஆகியோர் கலந்து கொண்டு உறுப்பினர்களுக்குச் சின்னம சூட்டி வைத்தனர்.

இதேவேளை பல வருடங்களாக சேவையாற்றுவோருக்கு உயர்பதவி நிலையும் இவ்வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டது. (ந)

## அலங்கார உற்சவம்

(சண்டிலிப்பாய்)

கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது திருவிழா நாட்களில் இரவு 7 மணிக்கு அருளமுதச் சொல்வாரி சிவத்திரு வ. குமாரசாமி அவர்கள் தொடர் சொற்பொழிவாற்றுவார்.

(ந-260)

## புத்தளத்தில் மினிசூறாவளி

(புத்தளம்)

புத்தளத்தில் நேற்று மாலை திடீர் சூறாவளியினால் 10 வீடுகள் புத்தளம் புகையிரத நிலையம் மற்றும் பல கட்டிடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 5 நிமிடங்கள் வீசிய மினி சூறாவளியினால் சுமார் 5 லட்ச ரூபாவுக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## அல்லைப்பிட்டியில் சோதனை தீவிரம்

(ஊர்காவற்றுறை)

அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் மீண்டும் பாதுகாப்புக்கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகம் செல்பவர்கள் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் பஸ்சில் இருத்து இறக்கப்பட்டு அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்ட பின்பே பயணத்தை தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை தற்காலிக அடையாள அட்டைகள், அஞ்சல் அறிமுக அட்டைகள வைத்திருப்போர் மீது கடுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(ந-75)

## பரீட்சை முடிவு மீளாய்வு 31-ம் திகதிக்கு முன்

(கொழும்பு)

க. பொ. த. உயர்தரப் பரீட்சைமுடிவுகளை மீளாய்வு செய்வதற்கு இம்மாதம் 31ம திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. 31ம் திகதிக்கு பின்னர் விண்ணப்பிக்கும் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என பரீட்சை ஆணையாளர் ஏ. ஆர். அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபரினூடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் நேரடியாகவும் விண்ணப்பிக்க முடியும். (ந-5)

## வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி தீவகம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.00 மணிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது. (உ-19)

# செய்தித் துளிகள்

## அணிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இருந்து தேசிய மட்டபோட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட வலைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் என்பவற்றின் மகளிர் அணிகளையும்,

உதைபந்தாட்ட ஆண்கள் அணியையும் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 00மணிக்கு செயலக விளையாட்டுப் பணிமனையில் ஒன்றுகூடுமாறு யாழ். செயலக விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ. எவ்.ஜே. ரூபசிங்கம் கேட்டுள்ளார் (உ-6)

## இலங்கை மீனவர் இந்தியாவில் கைது

(சென்னை)

தூத்துக்குடி மாவட்டத்தில் மணற்பாடி கிராமத்தின்கடற்பகுதிக்குச் சென்ற இலங்கைப் படகினை நேற்றுமுன்தினம் இந்தியக் கடலோரக் காவல் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

அதில் சென்ற 5 இலங்கை மீனவர்கள் தூத்துக்குடி காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## யாழ். வலய ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய மட்ட ஆங்கில தினப்போட்டிகளில் சிரேஷ்ட பிரிவு கவிதை, நாடகம் ஆகிய போட்டிகள் இம்மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் யாழ். இந்துக் கல்லூரியிலும்,

இருபாலாருக்குமான குழுப் பாடல் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யா/ திருச்குடும்பக் கன்னியர் மடத்திலும்,

கனிஷ்ட பிரிவு நாடகம், சிரேஷ்ட பிரிவு உரை நாடகம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு முறையே பரியோவான், சுண்டுக்குளி மகளிர் கல்லூரிகளிலும் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (உ-19)

## சுழற்சிமுறைக் கடன் வழங்கக் கோரிக்கை

(துன்னாலை)

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறைக் கடனாக வழங்குவதற்கு 5 இலட்சம் ரூபா நிதியினை வழங்குமாறு யு. என். எச். சி. ஆர். நிறுவனத்திடம் கரவெட்டிப் பிரதேச செயலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி சங்கத்தில் 130 பேர் அங்கத்தவர்களாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-41)

## அடிக்கடி குழு மோதல்

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டைப் பகுதியில் அடிக்கடி கோஷ்டி மோதல்கள் இடம்பெறுவது குறித்து அப்பகுதிப் பொதுமக்கள் மிகுந்த அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இளைஞர்கள் குழு பிரிந்து அடிக்கடி மோதுவதால் அயலில் வசிப்பவர்கள் அச்சமடைந்துகாணப்படுவதுடன், அமைதிச் சூழலுக்கு பங்கம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். (உ-11,262)

## விளையாட்டு உபகரணங்கள்

(சண்டிலிப்பாய்)

வலிதென்மேற்கு பிரதேசத்துக்குஉட்பட்ட முன்பள்ளிகளுக்கு அண்மையில் விளையாட்டு உபகரணங்களை யுனிசெவ் நிறுவனம் வழங்கியது. (உ-263)

## பாலர் பாடசாலை மாணவரிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வை எம்.சி.ஏ ஏற்பாட்டில், பாலர் பாடசாலை மாணவர்கள் மத்தியில் எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி பேச்சுப் போட்டி, ஆக்கத்திறன் போட்டி, ஓவியப் போட்டி ஆகியன நடத்தப்படவுள்ளன. (உ-6)

## கொழும்புத்துறை பாடசாலை நிலையை நேரில் பார்வை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இருமருங்கும் இராணுவச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளமை குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி, அவற்றை அப்புறப்படுத்தவழி வகை செய்வதென அப்பகுதிக்குநேற்று முன்தினம்நேரில் விஜயம்செய்தயாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி கஜேந்திரகுமார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் என்.குமரகுருபரன் ஆகியோர் உறுதியளித்துள்ளனர். (உ)

## நிகழ்கால அரசியல் கூட்டம்

(மந்திகை)

இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக கரணவாய்ப்பகுதி மக்களுடனான சந்திப்பு இன்று இரவு 7.30 மணிக்கு விவேகானந்த சனசமூக நிலையமுன்றலில் இடம் பெறவுள்ளது.

நிலையத்தின் செயலாளர் வே. கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரமுகர் வைத்தி உரையாற்றவுள்ளார். (உ-23)

## திருநாள் திருப்பலி

(செம்பியன்பற்று)

கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய திருநாள் திருப்பலி எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 12 வருடங்களாக இவ் ஆலயம் பூஜை வழிபாடுகள் இன்றி இருந்தமையும், இப்பகுதி மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-42)

## கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

காரைநகர் டிப்போவில் இருந்து யாழ். நகருக்கான பேருந்துச் சேவை காரைநகர் சிறினார் துறைமுகம் ஊடாக இடம்பெற வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-75)

## பிரதேச செயலக அமைப்பு பணிகள் ஆரம்பம்

(துன்னாலை)

வடமராட்சி கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட காணியில், மேற்படி பிரதேச செயலகத்திற்கான சொந்தக் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (உ-41)

# சமாதானம் குறித்த நிலைப்பாடு என்ன?

# பொ.ஐ.முவின் உத்தியோக பூர்வ அறிவிப்பு செவ்வாய் வெளியாகும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைத்துவக் கூட்டம் எதிர் வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் சமாதானம் குறித்து ஆராய மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தலைமையில் நியமிக்கப்பட்ட குழு இக் கூட்டத்தில் தமது வுறிக்கையினை சமர்ப்பிக்கவுள்ளது.

அரசு- புலிகள்புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதான முயற்சிகள் ஆகியன குறித்து உத்தியோக பூர்வ அறிவிப்பை அன்றையதினம் பொதுஜன ஐக்கிய முன்னணி விடுக்கும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (உ-8)

## சட்ட நிபுணர்களின் ஆலோசனை பெற ஏற்பாடு

(கொழும்பு)

ஐ தே. மு. அரசு பாராளுமன்றத்தை கலைக்கும்படியும் புதிய தேர்தலை நடத்தும் படியும் தீர்மானிக்கும் பட்சத்தில், அதன் சட்டரீதியான தாற்பரியங்கள் எவ்வாறு இருக்கும் என்பது பற்றி சட்டநிபுணர்களின் ஆலோசனையை நாடுவதென்று பொ ஐ. மு. பாராளுமன்றக் குழு தீர்மானித்தது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் வியாழன்று மேற்படி கூட்டம் நடைபெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பொ.ஐ.முவின் 11 எம். பிக்கள் பிரதமரைச் சந்தித்து நடத்திய பேச்சுக்கள் பற்றி கூட்டத்தில் பெரும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தாம் எம்.பிக்களுக்கு வழங்கப்படும் வாகனங்கள சம்பந்தமாக பிரதமருடன் பேசியதாக எம். பிக்கள் தெரிவித்துள்ளனர்; (த)

## திருமலையில் விரைவில் கண்ணிவெடி அகற்றும்பணி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில், கடந்த காலங்களின் போது புதைக்கப்பட்ட நிலக் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் ஆகியவற்றை அகற்றும் பணிகள் இம் மாதஇறுதியினுள்ஆரம்பிக்கப்படவுள்ளன.

திருகோணமலை மாவட்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள்உயர்ஸ்தானிகராலய பிரதி நிதி டேவிற்,

நேற்றுமுன்தினம் மாலை திருமலை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற திரியாய் கிராம மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் முதற்கட்ட வேலைகள் திரியாய் கிராமத்திலேயே முதற்தடவையாகஆரம்பிக்கப்படும் எனவும் அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

திருமலை மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின்பிரதிநிதிகள்இராணுவ, கடற்படை அதிகாரிகள், யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ.8)

## காரை-காவலூர் பயணிகள் படகுச் சேவை விரைவில் கைமாறும்

(ஊர்காவற்றுறை)

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவையினை வீதிஅபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்று நடத்துவது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

இப்படகுச் சேவையினை இலங்கைக் கடற்படையினர் தற்போது மேற்கொண்டு வருவதுடன்,

சேவை நேரஇடைவெளியும் அதிகம் காணப்படுகின்றது.

இதனால் பொதுமக்கள், வியாபாரிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் வீண் தாமதங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்நிலையில் இப்படகுச் சேவையை வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடத்தும் பட்சத்தில் இத்தாமதம்தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-75)

## இனத்துவம் தொடர்பான கலந்துரையாடல்

''இனத்துவம், அடையாளம் முரண்பாடுகள்'' என்னும் தலைப்பிலான கற்கை நெறி ஒன்று கொழும்பில்உள்ள சர்வதேசஇனத்துவ ஆய்வுக்கழக நிலையத்தில் இடம்பெற்று வருகிறது.

இம் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமான இக்கற்கை நெறி இம்மாத இறுதிப் பகுதிவரை இடம்பெறவுள்ளது.

இதில்கலந்துகொள்ளவென யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர்சென்றுள்ளனர்.

கற்கைநெறியில் வெளிநாட்டு விரிவுரையாளர்கள், மற்றும் உள்நாட்டுக் கல்விமான்கள் விரிவுரையாற்றவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி. கா. சிற்றம்பலம் ''இலங்கைத் தமிழரும் தமிழரின் வரலாற்று மூலகங்களும்' எனும்தலைப்பில்நாளை விழுவுரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## வேலையற்றபட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான வேலைத் திட்டமொன்றை வெகுவிரைவில் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்தசமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுபதவிஏற்றுசிறிதுகாலமே சென்றுள்ளது. இதனால் வருடக்கணக்கில் நிலவும் பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு கண்டு விடமுடியாது. கட்டம் கட்டமாகவே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனவும்,

தேசிய தொழில் கொள்கைத் திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலம், எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் இவர்களின் பிரச்சினையில் ஓரளவையாவது பூர்த்தி செய்து விட முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-8)

## மீளக் குடியமர்வோர்க்கு வீடுகள் நிர்மாணம்

திரியாய்ப் பகுதியில் மீளக் குடியமரும் குடும்பங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீள் குடியேற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போதே வங்கியின் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக ஒவ்வொன்றும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 200 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (உ-8)

## சந்நிதி ஆலயச் சூழலில் சுகாதாரக் கண்காணிப்பு

(மந்திகை)


தொண்டமானாறுசெல்வச் சந்நிதி ஆலய உற்சவகாலசுகாதார கண்காணிப்பில் வல்வெட்டித்துறை தொண்டமானாறுபிரதேசபொதுச்சுகாதாரப் பரிசோதர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உற்சவகாலத்தில் சுகாதார சீர்கேடுகள், தொற்றுநோய்கள் ஏற்படாதவாறு ஆலயச் சூழலை கண்காணிப்பதற்கு விசேடமாக காலை 6 00 முதல் மாலை வரை இவர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (உ-23)

# இன்றைய ரியூசன் கலாச்சாரம் இளஞ் சந்ததியின் அறிவு வளர்ச்சியை குறுக்கியுள்ளது

## - எழுத்தாளர் செ. யோகநாதன் வலம்புரிக்குப் பேட்டி -

**எம். டி. குணசேன நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவின் பதிப்பாசிரியராகப பணிபுரிகின்ற செ. யோகநாதன் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரின் அனுபவங்களை வலம்புரி வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதற்காக அவரை அணுகிய போது. . .**



**♦ கேள்வி : சுமார் இருபது ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணம் வந்துள்ளீர்கள். யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

**பதில் :** 20 வருடங்களின் பின் யாழ். வந்திருந்தபோதிலும் எனது மனம் இவ்வளவு காலமும் யாழ்ப்பாணத்தையே நினைத்திருந்தது. எமது மக்களின் அவலம், போராட்டம், துணிவு, எதிர்கால நம்பிக்கை என்பனவற்றை என்னுடைய எழுத்திலே நான் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளேன்.

அரச பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுகின்ற போராளிகளையும் மக்களையும் என்னுடைய எழுத்திலே நான் தொடர்ச்சியாகச் சித்தரித்திருக்கிறேன். எவ்வளவு தான் கொடுமைகளுக்கு உட்பட்டாலும் எமது மக்கள் மலர்ச்சியோடும் புத்துணர்வோடும் தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்கள் என்பதை நான் உறுதியாக நம்பியிருந்தேன்.

என்னுடைய மண்ணைப் பற்றிய எனது கனவும், ஆசைகளும் நான 20 வருடங்களின் பின் தரைவழியாகத் திரும்பி வந்தபோது உடைந்து போயிருந்ததை நான் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். கொழும்பிலிருந்து தலை மன்னார் வரையும் பின்னர் கொழும்பிலிருந்து பருத்தித்துறை வரையும் பயணம் செய்த போது எமது மண் எவ்விதம் குரூரமாகச் சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கண்டு வேதனையும் அளவற்ற துன்பமும் அடைந்தேன்.

உலக மகா யுத்தங்களைப் பற்றியும் கிறோஷிமா, வியட்நாம் யுத்தங்களைப் பற்றியும் நான் துல்லியமாக அறிந்து வைத்திருக்கிறேன். ஆனால் எமது மண்ணின் மீது நடத்தப்பட்ட எந்த நியாயமுமற்ற தாக்குதல்களைப்போல இந்த இடங்களில் ஒரு போதும் நடக்கவில்லை என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். மக்கள் குடியிருப்புகள் திட்டமிட்டே அழிக்கப்பட்டிருக்கின்றன. இவை எல்லாவற்றையும்விட எமது மண்ணின் வளங்களான தென்னையும், பனையும் மோசமாக நாசமாக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடங்கள்மீது குண்டுகள் மழையாகப் பொழிந்திருக்கின்றன. இவற்றுள் சிக்கி எண்ணிறந்த மக்கள் இறந்து போயிருக்கலாம்.

எமது வளமான மரங்கள் எங்களால் எமது குடும்பத்தின் ஒரு உறுப்பினராகவே எம்மால் வளர்க்கப்பட்டு வந்தவை. இந்த மரங்களை வெட்டி அழித்தது. இன்னொரு விதத்தில் ஒரு மூர்க்கமான கொலைதான். இவைகளை எல்லாம் பார்க்கின்ற போது அடிவயிறே பற்றி எரிகிறது. இந்தத் தாக்குதலின் அடிச்சரடு மோசமான இனத்துவேசமே என்பதை யாராவது மறுக்க முடியுமா?

**இன்றுள்ள கல்வித்திட்டம் இளைஞர்களிடையே மோசமான விரக்தியை உண்டாக்கும். இதைத் தூக்கியெறியாமல் ஆரோக்கியமான சமுதாயத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியாது.**

இதைவிட இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையை நான் அவதானித்தேன். அவர்கள் மனமுடைந்து போய் இருந்தாலும் ஒரு கீற்று வெளிச்சமாக அவர்களிடம் எதிர்கால நம்பிக்கை படிந்திருப்பதைக் காண முடிகின்றது. இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம் என்று அவர்கள் நம்புவதற்கு இன்று அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் தலைமையும் காரணமாகும்.

நாவல, குறுநாவல, சிறுகதை, குழந்தை இலக்கியம், வாழ்க்கை வரலாறு, மொழி பெயர்ப்பு ஆகிய துறைகளில் கால்பதித்த எழுத்தாளர் செ. யோகநாதனின் ஏறக்குறைய 80 நூல்கள் இதுவரை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் வெளியாகியுள்ளன. இவருடைய ஆக்கங்கள் ஆங்கிலம், ருஷ்ய, ஜேர்மனிய மற்றும் இந்தியாவின் 18 மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 13 ஆண்டுகள் வாழ்ந்த இவர் தமிழக அரசின் சிறந்த படைப்பாக்கங்களுக்கான விருதுகளை மூன்று தடவையும் இலக்கிய சிந்தனைக்கான 'கதா' உட்பட பல பரிசுகளைப் படைப்பிலக்கியங்களுக்காகப் பெற்றவர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு 4 முறை இவருக்குக் கிடைத்துள்ளது.

இன்றைய இளந்தலைமுறை யாழ்ப்பாண மண்ணின் செம்மையான அடையாளத்தைக் கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளுக்குள் இழந்து மோசமான கலாசார சீரழிவால் பாதிக்கப்பட்டிருப்பதனையும் குறிப்பிடவேண்டும் அமெரிக்கர்கள் வியட்நாமில் இப்படி 'ஹூலாகூப்' கலாசாரத்தைப் பரப்பி இளைஞர் தலைமுறையை நாசமாக்க முயன்றது போல இங்குள்ள இளைஞர் சக்தியைக் கடந்த 6, 7 வருடங்களில் போதை, நீலப்படம் போன்ற கலாசார சீரழிவுகளால் கெடுப்பதற்கான பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மனச்சோர்வடைந்திருந்த இளைஞர்களில் சிலர் இக்கொடிய நோய்க்கு உட்பட்டிருக்கிறார்கள் என்பதை பல கல்வியாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் கூறியபோது இதன் ஆழமான பாதிப்பை உணரக் கூடியதாகவுள்ளது. ஆயினும் இவற்றை இனிவரும் கட்டுப்பாடான வாழ்க்கை முறையால் மாற்றியமைக்கமுடியும். அதற்கான பிரயத்தனங்களை விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டு வருவது மிகவும் ஆரோக்கியத்திற்குரிய விடயம்.

**♦ கேள்வி : இதைவிட இன்றைய இளந்தலைமுறை பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

**பதில் :** இப்போதைய மோசமான கல்வி முறையும், ரியூசன் கலாசாரமும் இன்றைய இளந்தலைமுறையின் அறிவு வளர்ச்சியைக் குறுக்கி உள்ளதை என்னால் அவதானிக்க முடிகிறது. அனேகமான மாணவர்கள் பாடசாலைக்கு வெளியேயுள்ள பாடக் குறிப்புகளையே அறிவுக் களஞ்சியமாக ஏற்று அதற்கு வெளியே எதையுமே படிக்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் இந்தக் கல்வித் திட்டம் இளைஞர்களிடையே மோசமான விரக்தியை உண்டாக்கும். இதைத் தூக்கியெறியாமல் ஆரோக்கியமான சமுதாயத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியாது.

'தமிழால் முடியும்' என்று கூறி பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை 1960 களில் இருந்து உலகிலேயே முதன் முதல் சுய மொழிக்கல்வியை நாம் கொண்டு வந்தோம். தமிழில் கற்றுப் பட்டம் பெறுவதே மேன்மையான அறிவைத் தரும் என்று உறுதியாகச் சொன்னோம். அதனால் தான் இன்றைக்கு இலங்கையில் இருக்கக் கூடிய அரச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் உயர் பதவியில் இருக்கின்ற அனைவரும் தமிழ்மொழி மூலம் பட்டம் பெற்றவர்களாக இருக்க முடிந்தது. இந்தப் பெருமைக்கு இவர்களை தமிழ் மொழிக்கல்வி தான் கொண்டு வந்தது.

ஆனால் இப்பொழுது ஆங்கிலத்தின் மூலம் கற்பதே கல்வி வளர்ச்சிக்கு அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தைக் கற்பதற்கு தனிப் பிரயத்தனங்கள் எடுக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் பூரண பயிற்சி பெறமுடியாத பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைப் பாதியிலேயே விட்டுவிட்டு ஓடுகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. இவையெல்லாம் இந்த மாணவர்களைக் கொலை செய்யும் முயற்சிகள்தான்.

இன்றைக்கு அரச பயங்கரவாதத்திற்கு எதிரான சகல போராட்டங்களினதும் வேர் எது வென்று நாம் தேடிப் பார்த்தால் அது தமிழுக்கும், சிங்களத்திற்கும் சம அந்தஸ்து கொடுக்கப்படவேண்டும் என்பதும், மாணவர்களின் தகுதிக்கேற்ப படிப்பு வசதி கொடுக்கப்படவேண்டும் என்பதும் தான். இதற்காகவே எல்லாப் போராட்டங்களும் ஒரு திசையை நோக்கி மையங் கொண்டன.

**ஆங்கிலத்தில் பூரண பயிற்சி பெற முடியாத பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைப் பாதியிலேயே விட்டு விட்டு ஓடுகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. இவையெல்லாம் இந்த மாணவர்களைக் கொலை செய்யும் முயற்சிகள்தான்.**

இப்பொழுது அதற்குத் தலைகீழாக ஆங்கிலம் வேண்டுமென்பதும் 2% மாணவர்களே பல்கலைக்கழகத்திற்குச் செல்லக் கூடியதாய் உள்ள கல்வியமைப்பை ஏற்றுக்கொள்வதும் எவ்விதம் முரணானது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆங்கிலம் ஒரு உலகமொழி அல்ல. அது ஒரு சக்தி குறைந்து போய்க் கொண்டிருக்கின்ற வெறும் இணைப்பு மொழி தான். புலம்பெயர்ந்த எம் இளைஞர்கள் ஜேர்மனியிலும், பிரான்ஸ்சிலும், டென்மார்க்கிலும் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு எதுவுமே செய்ய முடியாது. அவர்கள் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே வல்லவர்களாக விளங்குகிறார்கள்.

இன்னொரு விதத்தில் ஆங்கிலமே பாடமொழி என்று கூறுவதன் வாயிலாக மீண்டும் பணக்காரர் கல்வி வசதி பெறவும் சாதாரண கிராம மக்கள் எல்லாக் கல்வி உரிமைகளை இழக்கவும் வழி பிறக்கும்.

இதை இன்றைய கல்வியாளர்களும் இன்றைக்கு தமிழர்களுக்கு அரசியல் தலைமை கொடுக்கின்றவர்களும் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று என்னைப் போன்ற பலர் விரும்புகிறார்கள்.

**♦ கேள்வி : இனி வருங்கால இலக்கியப் போக்குகள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?**

**பதில் :** சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் படைப்பிலக்கியம் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டும். அது தேசிய இன ஒடுக்குமுறையாக இருந்தாலென்ன, சாதி ஒடுக்குமுறையாக இருந்தாலென்ன, பெண்ணடிமைத்தனமாக இருந்தாலென்ன இவற்றுக்கு எதிராக இன்றைய எழுத்து இருக்க வேண்டும்.

குறிப்பாக இன்றைய எமது மானிட மேன்மைக்கும், நம்பிக்கைக்கும், போராட்டங்களுக்கும் ஆதரவு கொடுப்பதாக எமது எழுத்து இருக்கவேண்டும். இதற்குப் பதிலாக நிலவையும், இயற்கையையும், கலை கலைக்காக என்ற போக்கையும் சொல்லடுக்குகள் மூலம் வெளிப்படுத்த விரும்புகிறவர்கள் மக்களிடம் இருந்து விலகிப் போகிறார்கள். இப்போதைய சூழ்நிலையில் அத்தகைய இலக்கியங்கள் நமக்குத் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

நேர்கண்டவர் :
எம். எஸ். எஸ். கீர்த்தி




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் சமூகத்தின் "உலகப் புகைத்தல் எதிர்ப்பு நாள்" அண்மையில் கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சுகநல போதனாசிரியர் எஸ். ராஜேந்திரம் உரையாற்றுவதையும், சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கம், வைத்தியக் கலாநிதி கே. சிவனேசன் மற்றும் சமூகவியல் சமூகப் பெரும் பொறுப்பாளர் ரிச்சட் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## இளைஞர் படையா? ஆயுதப் பயிற்சியா? சபையில் சர்ச்சை

(கொழும்பு)

இளைஞர் படை என்ற பெயரில் இளைஞர்களைத் திரட்டி பொ.ஜ.மு.வுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட அரசாங்கம் முயல்கிறது என்று பொ.ஜ.மு தேசியப் பட்டியல் உறுப்பினர் மகிந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

இளைஞர் படைச் சட்ட மூலம் மீதான விவாதத்தை எதிர்க் கட்சிகள் சார்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர், மீண்டும் இளைஞர் ஆயுதம் ஏந்தும் சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த முனைகிறது என்றும் சர்ச்சை கிளப்பிப் பேசினார்.

(உ)



யாழ் பல்கலைகழக நடனத்துறை விரிவுரையாளர் லயஞான வாரிதி திரு. சி. மகேந்திரன் அவர்களின் மகனும், மாணவனுமஆகிய செல்வன் லோகேந்திரனின் மிருதங்க அரகேற்றம் 04.08.2002 அன்று ஞாயிற்றுக்கிழமை இளம் கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் இடம் பெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

# இன்று ஒரு தகவல்

## அன்னரச அமிர்தசஞ்சீவி

அன்னரச அமிர்த சஞ்சீவி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நானும் கொஞ்ச நாட்களுக்கு முன்னர் தான் அது என்னவென்று புரிந்துகொண்டேன். கிராமத்தில் ஒரு பழையகாலத்துவீடு. அந்தவீட்டிலிருந்த அலுமாரியைச்சுத்தம் பண்ணினபோது பழைய புத்தகம்ஒன்றுகிடைத்தது. அதை ஒரு பெரியவர் எடுத்து என்னிடம் கொடுத்தார். வாங்கிப்பார்த்தேன், தலையணை மாதிரிஇருந்தது. அவ்வளவு பெரியபுத்தகம். 904 பக்கம். விலை எவ்வளவு என்றுபார்த்தேன், 3 ரூபா 12 அணா என்று போட்டிருந்தது. 78 வருடங்களுக்கு முன் வெளியான புத்தகம். 20-5-1925 அன்றைக்கு எட்டாம் பதிப்பு 4000 பிரதிகள் போட்டிருக்கிறார்கள். புத்தகத் தலைப்பு, ''ஜீவப்பிரம்மைக்கிய வேதாந்த ரஹஸ்யம்'' அதில் முதல் பக்கத்தில் இது வெட்டவெளி பரம்பரையில் வந்த ஸ்ரீநித்பா நந்த சுவாமிகளின் பிரிய சிஷ்யராகிய கடப்பை ஸ்ரீபரம ஹம்ஸ சச்சிதானந்த யோகிஸ்வரர் அவர்களால்இயற்றிசென்னை சூளை 'ஸ்ரீ பாரதி' அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது என்று போட்டிருந்தது.

அந்தப் புத்தகத்தைப் புரட்டியதன் பின்னர்தான் 'அன்னரச அமிர்த சஞ்சீவி' என்றால் என்னவென்று புரிந்துகொள்ளமுடிந்தது. அதுவேறொன்றுமில்லை. ''அன்னரசம் என்றால் என்ன? அன்னம் என்றால் சோறு, ரசம் என்றால் சாறு, அன்னரசம் என்றால் நீராகாரம். அதுதான் அன்னரச அமிர்த சஞ்சீவி. அந்த அளவுக்கு அதிலே விஷயம் இருக்கிறதா என்று நீங்கள் கேட்கலாம். இருக்கிறது. அதுதான் இன்றைக்குத் தகவல்

''பழைய சாதமும் அதன் நீரும்சாப்பிட்டுவந்தால் அவர்களுக்கு மலச்சிக்கலில்லாமலும், சரீரத்திற்கு எவ்வித வியாதிகளும் வராமல் எப்பொழுதும்சுகமாயிருப்பார்கள்'' என்று அந்தப்புத்தகத்தில்எழுதியிருக்கிறது.

பழைய சாதம் எப்படித் தயார் பண்ணுவது என்ற விபரமும் அதிலே இருக்கிறது 'இது என்ன பெரிய விஷயம்? இரவு மீதமாகும் சோற்றில் தண்ணீரை ஊற்றிவைத்தால் மறு நாள் காலையில் அது

சாதத்தை எடுத்துப்போட்டுக் கொள்ளுங்கள் அதற்கு மேல் இரண்டு அங்குல உயரத்துக்கு வருகிற மாதிரி அந்த தண்ணீரையும் ஊற்றிக் கொள்ளுங்கள் கொஞ்சம் அதிகமாக கரிக்கிற மாதிரி உப்புப் போட்டுக் கொள்ளுங்கள் ஊறுகாய் ஏதாவது பக்கத்தில் வைத்துக் கொள்ளுங்கள். சோற்றைச் சாப்பிட்டு விட்டு அந்தத் தண்ணீரையும் குடித்து விடுங்கள். மழைக்காலம் குளிர்காலம்எதைப்பற்றியும்கவலைப்படாமல்ஆயுள் பூராவும் இதைச் சாப்பிட்டுக்கொண்டு வரலாமாம் இப்படிச் சாப்பிட்டுக் கொண்டு வந்தால் எந்தக்காலத்திலும் எந்த வியாதியும் நம்மிடம் வராது என்று உத்தரவாதம் அளிக்கிறார் அந்தமகான். சின்னப் பிள்ளைகளிலிருந்து பெரியவர்கள் வரையும் எல்லோரும் இப்படிச் சாப்பிடலாம்.

முதலில் ஒரு ஆறுமாதம் இப்படிச் சாப்பிட்டுக்கொண்டு வந்தாலே, அதனுடைய பலன் என்ன என்பதை நீங்கள் உணர ஆரம்பித்து விடுவீர்கள். அதன் பின்னர் மற்றவர்கள் வேண்டாம் என்று சொன்னாலும் நீங்கள் விடமாட்டீர்கள். இன்னொரு வைத்தியம் உண்டு, குடல் சுத்தமாக வேண்டுமா? வேறு ஒன்றும் வேண்டாம் என்று சொன்னாலும் நீராகாரத்தை ஒரு இரண்டரை டம்ளர் எடுத்துக் கொள்ள வேண்டியது. கொஞ்சம் அதிகமாகக் கரிக்கிற மாதிரி உப்பைப் போட்டு (மிக அதிகமாக அல்ல காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவேண்டியது, உடனே தாம்பூலம் போட்டு விழுங்கவேண்டும், அவ்வளவுதான் வயிறு சுத்தமாய் விடுகிறது;

அந்தப் பழையசாதத்தில் தயிர் அல்லது மோர்விட்டுச் சாப்பிடக் கூடாதாம். திமிர்- சோம்பேறித்தனம் கொட்டாவி- தூக்கம்- மந்தபுத்தி எல்லாம் வந்து விடுமாம் நமக்கு வம்பெதற்கு? ஏற்கனவே இருப்பது போதாதா? இதுவரையும் சொல்லியிருக்கிற விபரங்கள் ஒருமகான் அனுபவத்திலே சோதித்துப் பார்த்து விட்டு நமக்குச்சொல்லியிருக்கிற விஷயங்கள். இது கைகண்ட அன்னரச அமிர்த சஞ்சீவி ஔஷதமென்று அறியக்கடவீர்கள் என்று அவர் எழுதியிருக்கிறார்.

# அமைச்சர்களின் வங்கிக்கடன் விபரங்களை வெளியிட வேண்டும்

## ஸ்ரீ. சு. க, நிதியமைச்சரிடம் கோரிக்கை

(கொழும்பு)

அரசவங்கிகளில்கடன் பெற்றுள்ள சகலபாராளுமன்ற உறுப்பினர்களின் விபரங்களையும், மக்கள் மத்தியில் வெளியிடவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலா சிறிசேன நிதியமைச்சர் கே என் சொக்ஸியை கேட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே சிறிசேன இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற 225 உறுப்பினர்களும் பெற்றுக் கொண்டவங்கிக்கடன் தொடர்பான விபரங்களைவெளியிடும் பொறுப்பு நிதி அமைச்சர் என்றவகையில் அவரையே சாரும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள்பெற்றுக் கொண்ட கடன் தொகை, பேறப்பட்ட காலப் பகுதி இதுதொடர்பாக அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் நாட்டு மக்களுக்குஅறிவிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(உ-8)

# இராசி பலன்

11-8-2002
(ஆடி 26, ஞாயிறு)
திருதியை மாலை 6 55 வரை
பூரம் ந.ப.12.35 வரை
ராகுகாலம்-4,34-6 04
நல்ல நேரம்-9.04-10 34
ஆடிப்புரம், சித்தாமிர்தம்

**மேடம்**
தொழில் விருத்தி, புத்திரரால் கவலை, காரிய இடையூறு.

**இடபம்**
ரோகபயம், பெரியோர்ஆதரவு, காரிய தாமதம் தர்மம்.

**மிதுனம்**
புதிய பொருள் சேர்க்கை எடுத்த காரியம் கைகூடும், குடும்பத்தில் மங்களம்.

**கடகம்**
கௌரவக்குறைவு, போசன சுகம், எடுத்த காரியம் தாமதம், அதிக வார்த்தை.

**சிங்கம்**
தய்வ சிந்தை, முயற்சி கைகூடும், காரிய அனுகூலம், பெரியோர் ஆதரவு.

**கன்னி**
பிரயாண நன்மை, செய்தொழில் விருத்தி, அமைதிக் குறைவு, பிதாவழி நினைவு.

**துலாம்**
காரியம் கைகூடும், உறவினர் வருகை, போசன சுகம், தெய்வ சிந்தை.

**விருச்சிகம்**
தொழில் முயற்சி, நன்மையான சம்பவம், கலந்துரையாடல், மேன்மை.

**தனுசு**
புதியசிந்தை, கல்விவிருத்தி, வயிற்றுக் கோளாறு' காரிய

# இலங்கையின் சமாதான முயற்சிகள் தடம்புரளும்

## எச்சரிக்கிறார் நோர்வேத் தூதர்

(கொழும்பு)

இலங்கையில் புதியதேர்தல் இடம்பெறுமாயின் சமாதான முயற்சிகள் தடம்புரளும்என இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் எச்சரித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

தேர்தல், ஜனநாயக வழி முறையிலான ஏற்பாடு என்றாலும் சமாதான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தேர்தல் நடை பெறுமாயின் அது சமாதானமுயற்சிகளை பாதிப்படையச்செய்யும்.

சமாதான முயற்சிகள் எப்பொழுதும் பலவீனமானவை. சமாதான முயற்சிகளை மேலும் பலவீனமடையச் செய்யும் விடயங்கள் பல உள்ளன.

தற்போது அமுலிலுள்ள யுத்த நிறுத்தம் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சாதகமாக உள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தை, எப்போது என்ற வினா எழுந்தது. தற்போது தேர்தல் எப்போது என்ற வினா எழுகிறது.

அதேவேளை, விடுதலைப் புலிகள் நோர்வேயின் அனுசரணையை விரும்பவில்லை என தகவல்கள்வெளியாகின. இதில் எந்தவித உண்மையும் இல்லை. இந்தத் தகவல்வெளியாகி 4 மணித்தியாலங்களின் பின்னர் நான்அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசினேன். செப்ரெம்பர் 11இல் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல் தான் விடுதலைப்புலிகளை சமாதானப் பேச்சில் நாட்டம் கொள்ள வைத்தது என்பது உண்மையல்ல. இரண்டு ஆண்டுகளுக்குமுன்னரே அதற்கான முயற்சிகள் ஆரம்பமாகி விட்டன.

இதில் விடுதலைப்புலிகள் அதிக ஆர்வம் காட்டினர். செப்ரெம்பர் 11இற்குப் பின்னர்உருவாகியுள்ள யதார்த்த நிலையை இருதரப்பினரும் உணர்ந்து கொண்டுள்ளனர் என்பதுதான் உண்மை என்றும் அவர் கூறினார்.

(த-5

# இயங்காத தொழிற்சாலை விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்இயங்க முடியாமல் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் கைத்தொழில், சேவை நிறுவனங்கள்பற்றிய விபரங்கள் சேம்பர் ஒவ் கொமேர்ஸ் அன்ட் இன்டஸ்ரீஸ் ஒவ் யாழ்ப்பாணம் என்ற அமைப்பினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் மேற்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கைத்தொழிலாளர்கள் குடிசைக்கைத்தொழிலாளர்கள், மற்றும் சேவை நிறுவனங்களைச் சார்ந்தோர் இல 150, ஜமுனா வீதி, நல்லூர் என்னும் முகவரியில் வினாக்கொத்தினைப் பெற்று பூரணப்படுத்தி ஒத்துழைக்குமாறும் அமைப்பின் செயலா

'இது என்ன பெரிய விஷயம்? இரவு மீதமாகும் சோற்றில் தண்ணீரை ஊற்றிவைத்தால் மறு நாள் காலையில் அது தான் பழைய சோறு' என்று சொல்லத் தோன்றுகிறதா? அப்படியில்லை இதில் சில நுணுக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

குக்கரில் சாதம் தயார்பண்ணுகிற காலம் இது. அந்தக் காலத்தில் அப்படி இல்லை! இரவில் சாதம் வடித்த பின் ஒரு பாத்திரத்தில் சுத்தமான தண்ணீரை விட்டுக்கொதிக்க வைக்க வேண்டும். சாதம் வடித்தகஞ்சி இருக்கிறதல்லவா அதன் மேலே படிந்திருக்கிற ஏட்டை எடுத்து விட்டு அந்தக் கஞ்சியை குடும்பத்துக்கு வேண்டும் என்கின்றஅளவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் இரண்டு பங்கு இந்தக் கஞ்சி நீர், ஒரு பங்கு கொதித்து ஆறிய நீர் ஆகிய இரண்டையும் ஒரு பாத்திரத்தில் கலந்து வைக்க வேண்டும். இரவு எல்லாரும் சாப்பிட்ட பின்னர் மிகுதியாயிருக்கிற சாதத்தில் இதை ஊற்றி மூடி வைத்து விடவேண்டும் அவ்வளவுதான்.

காலையில் எழுந்து பல் தேய்த்து குளித்து எல்லாம் முடிந்த பின்னர் சாப்பிட உட்காருங்கள். இதற்கு இலை வேண்டாம். ஒரு கிண்ணியில் கைகண்ட அன்னரச அமிர்த சஞ்சீவி ஔஷதமென்று அறியக்கடவீர்கள் என்று அவர் எழுதியிருக்கிறார்.

அதைஇப்போது உங்கள் காதிலும் போட்டுவைத்து விட்டேன், உங்கள் வீட்டில் இருக்கிற மற்றவர்கள் காதிலும் விழுந்திருக்கும். பாவம் சார் நீங்கள், நாளைக்கு காலையிலிருந்து உங்கள் வீட்டு காலை ஆகாரம் வித்தியாசமாக இருந்தால் உன்னால்தான் இப்படி என்று அதற்காகச் சண்டை போடுவதற்கு என்னைத் தேடிக் கொண்டு வராதீர்கள்! இதில் மறை முகமாக நான் உங்களுக்கு ஒரு சௌகரியமும் பண்ணியிருக்கிறேன், அதையும் நீங்கள் யோசித்துப்பார்க்கவேண்டும். 'உங்கள் வீட்டில் இதுதான்' காலைச்சாப்பாடு என்று தெரிந்து போய் விட்டால் அதன்பின் உங்கள் வீட்டுச்கு விருந்தாளிகள் யாரும் வரமாட்டார்கள். அப்படியே வந்தாலும் வருகிற வழியில் இருக்கிற ஹோட்டலிலேயே ஒருவாய் சாப்பிட்டு விட்டு வந்துவிடுவார்களே! இதை நினைத்துப் பார்த்தால் நீங்கள் எனக்கு நன்றி சொல்லவேண்டும்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

### தனுசு

புதியசிந்தை, கல்விவிருத்தி, வயிற்றுக் கோளாறு' காரிய தாமதம்.

### மகரம்

உடல் வியாதி. வீண் தொல்லை, முயற்சி தாமதம், வாகன பயம்.

### கும்பம்

காரிய நன்மை, தெய்வ சிந்தை, பிரயாண சுகம், நண்பர்கள் உதவி.

### மீனம்

முயற்சி கைகூடும் நோய் குணமடைதல், மனமகிழ்ச்சி, பயணம்.

(பழைய நேரப்படி சணிப் பிடப்பட்டது.)

வளவன்

## சிறார்களின் உளநல பயிற்சிப் பட்டறை வன்னியில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி.சற். நிறுவன அனுசரணையுடன்பிள்ளைகளின் உளநலம் தொடர்பான பயிற்சிப் பட்டறை வன்னியில் இடம் பெறவுள்ளது.

இம் மாதம் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறைக்காக யாழ். சாந்தியக உளவளத்துணையாளர்கள், ஆசிரியர்கள், பயிற்றுனர்கள் என 12 பேர் அடங்கிய குழு ஒன்று செல்லவுள்ளது.

ஜி.ரி.சற்.இன் வவுனியா செயல் திட்டப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலாதலைமையில் இது இடம்பெறவுள்ளது.

(உ-6)

இன்டஸ்ரீஸ் ஒவ் யாழ்ப்பாணம் என்ற அமைப்பினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் மேற்படி அமைப்பினால் ஒரு தகவல் வினாக் கொத்து வழங்கப்பட்டு அவை பற்றிய மதிப்

லூர் என்னும் முகவரியில் வினாக்கொத்தினைப் பெற்று பூரணப்படுத்தி ஒத்துழைக்குமாறும் அமைப்பின் செயலாளர் கேட்டுள்ளார்.

(ஷ)

## பரு.ஆஸ்பத்திரி கதிர் இயக்க பிரிவு செயலிழப்பு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை கதிர் இயக்கப் பிரிவின் இயக்குநர் லீவில் சென்றுள்ளதை அடுத்து அப்பிரிவு செயலிழந்துள்ளது.

இதனால் கதிர் இயக்கப்பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய நோயாளர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்கள்பல் வேறுசிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மேற்படி பிரிவுக்கு பதில் இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-23)

## புனரமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ள பளை, இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்தைப் புனரமைப்பது தொடர்பானஆலோசனைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

(உ)

# அமைச்சர் மிலிந்தவின் ஆலோசகரது மாதச் சம்பளம் ஒரு மில்லியன்

## ஜனாதிபதி மிகுந்த ஆட்சேபம்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான அலுவல்கள், தொழில் நுட்ப அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் ரோஹான் சமரஜீவவிற்கு மாதம் ஒரு மில்லியன் ரூபா சம்பளமாக வழங்கப்படுவதை ஜனாதிபதி ஆட்சேபித்துள்ளார்.

இவர் இதற்கு முன் தொலைத் தொடர்பு அதிகார சபையின் ஆலோசகராக பணியாற்றும் போது ஒரு லட்சம் ரூபாவே சம்பளமாக பெற்று வந்தார் எனக் கூறிய ஜனாதிபதி இந்தளவு சம்பளத்தை தனியொருவருக்கு வழங்கப்படுவதை நாடு தாங்காது எனவும் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இவ்வாறு கண்டனம்தெரிவித்தார். இதற்குபதிலளித்த விஞ்ஞான, தொழில்நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, சமரஜீவவிற்கு இதற்கேற்ற தராதரங்கள் உள்ளன என்றும், அவரது நியமனம் உலக வங்கியால் வழங்கப்பட்டதென்றும், சம்பளமும் உலகவங்கியின் நன்கொடையிலிருந்தே வழங்கப்படுகிறதென்றும் தெரிவித்தார்.

ஆனாலும் ஜனாதிபதி இப்பதிலால் திருப்தியடையவில்லை. (உ)

## பா.உ அல்லாதவருக்கு அமைச்சர் பதவி!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்களையும் அமைச்சர்களாக நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார். (ம)

## சர்வதேச கண்காட்சியில் குடாநாட்டு உற்பத்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்செயலக கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தினால் உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அழகுசார் பொருட்கள் பலவும் எதிர்வரும் 15,16ம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவுள்ள சர்வதேச கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

பனை அபிவிருத்திச்சபை யாழ் தொழில் துறைத் திணைக்களம் உள்ளூர் கைத்தொழில் நிறுவனங்கள் ஆகியன யாழ் குடாநாட்டில் இருந்து இக்கண்காட்சியில் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## தங்காலை பொலிஸ் நிலையத்தில் கைக்குண்டுகள் மாயம்

(கொழும்பு)

தங்காலை பொலிஸ்நிலைய ஆயுத களஞ்சியத்திலிருந்து 26கைக்குண்டுகள் காணாமல் போயுள்ளதாக நிலைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தக் கைக்குண்டுகள் காணாமல் போயுள்ளதை அடுத்து பொலிஸ்நிலையத்தில் பெரும் சிக்கல்நிலை தோன்றியுள்ளதாகவும், இவை தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ- 8)

## இலவசப் பாடப்புத்தக விநியோகத்தை கவனிக்க நால்வர் கொண்டகுழு

(கொழும்பு)

அடுத்தகல்வி ஆண்டுக்கான இலவச பாடப்புத்தகங்களை பாடசாலைகளுக்கு ஒழுங்காக விநியோகிப்பதைக் கண்காணிக்க 4பேர்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவிற்கு கே.எஸ். ஜே. விஜயதாஸ தலைமை தாங்குகின்றார்.

கல்வி, பாடசாலைக்கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள் டி.பி.நாணயக்கார எச்.எம்.பியசேன, கல்வி பிரசுரங்களுக்கான ஆணையாளர் எஸ்.எம்.குணவர்த்தன ஆகியோர் இக்குழுவின் அங்கத்தவர்களாவர்.

சகல பாடசாலை மாணவர்களுக்கும் டிசம்பர் மாதம்15ந் திகதிக்கு முன்னர் இலவசப் பாடப் புத்தகங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

## நடுக்கடலில் தத்தளித்த சிங்கள மீனவர்கள் காப்பாற்றப்பட்டனர்

(மந்திகை)

வடமராட்சிக்கடற்பரப்பில் உதவியின்றித் தத்தளித்துக் கொண்டிருந்த 4 சிங்கள மீனவர்கள் முனைகடற்றொழிலாளர்களால் காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை மாலை இயந்திரக் கோளாறு காரணமாக காற்றுடன் அடித்து வரப்பட்ட வள்ளம் ஒன்று நடுக்கடலில் உதவியின்றித் தத்தளித்துக்கொண்டிருந்ததை முனைப்பகுதி மீனவர்கள் அவதானித்தனர்.

உடனடியாக தமது படகுகளில் விரைந்து சென்ற மீனவர்கள் அவ் வள்ளத்திலிருந்த 4மீனவர்களையும் பத்திரமாகக் கரைசேர்த்தனர். மீட்கப்பட்ட இயந்திரப்படகும் கரைக்கு இழுத்து வரப்பட்டு திருத்த வேலைகள் செய்யப்பட்டன.

கரைசேர்க்கப்பட்ட 4 மீனவர்களும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் என அறியப்பட்டுள்ளது. (ஷ-23)

## பலம் போதாமையால் தவிடு பொடியான அரசின் திட்டங்கள்

(கொழும்பு)

கட்சிவிட்டு கட்சிதாவும் சட்டமூலத்தை பாராளுமன்றில்நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர்சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்தசட்டமூலத்திற்குஆதரவளிக்கப்போவதில்லை என அரசின் பங்காளிக் கட்சியான சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் ஏற்கனவே அறிவித்து விட்டது.

இதன்மூலம் அரசின்திட்டங்கள் தவிடு பொடியாகி விட்டன என்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேலும் தெரிவிக்கையில்;

கட்சிதாவும் சட்டமூலத்தை சிறுபான்மைக் கட்சிகள் ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை.

இதனால் மேற்படி சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தர்மசங்கட நிலையை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும்தெரிவித்துள்ளார். (த)

## 453 பேர் இதுவரை விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் இதுவரை 453 பேர் விடுவிக்கப்பட்டனர்.

சிலர் உயர் நீதிமன்றத்தாலும், சிலர் சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரிலும் விடுவிக்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் களுத்துறை, வெலிக்கடை, கண்டி, பதுளை, வவுனியா, திருகோணமலை, அநுராதபுரம் சிறைகளிலுள்ள 359 சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தும்படி சட்டமா அதிபர் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (சு)

## யாழ். நகரப்பகுதி வர்த்தக நிலையத்தில் கள்வர் கைவரிசை

(காரைநகர்)

யாழ். நகர வர்த்தக நிலையம் ஒன்றில் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்ற துணிகரத் திருட்டுச் சம்பவத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள சிவாஸ் சென்ரர் வர்த்தகநிலையத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்கூறப்பட்ட வர்த்தக நிலையக்கூரையைப் பிரித்து இறங்கிய திருடர் அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த றேடியோக்கள், கைக் கடிகாரங்கள், இலத்திரனியல் பொருட்கள் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சம்பவம் நடந்த வர்த்தக நிலையத்திற்கு நேரடியாக பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ-246)

## எழுவைதீவுக்கான குடிநீர் விநியோகம் வியாழனன்று ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

எழுவை தீவுக்கு படகு பவுஸர் மூலம் குடிநீர் வழங்கும் பணி கடந்த வியாழன் முதல் இடம் பெற்று வருகின்றது.

ஊர்காவற்றுறைகண்ணகை அம்மன் கோவில் துறைமுகத்தில் இருந்து இப்பணிக்காக தினமும் 2 தடவைகள் படகு பவுஸர்மூலம்குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது.

மேற்படி படகு பவுஸர் 2 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு உடையது என்பதும்,

இப்பணியை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-75)

## இளைஞர் சங்கப் புனரமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சைவமகாசபை இளைஞர் சங்கப் புனரமைப்புக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் சிவத்திரு சிவபாதசுந்தரநாத தம்பிரான் சுவாமிகள் தலைமையில்நடைபெறவுள்ளது. (உ)

## உள்ளக விளையாட்டு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வை.எம்.சி.ஏ அங்கத்தவர்களுக்கிடையிலான கரம், பூப்பந்தாட்டம், சதுரங்கம், டாம், மேசைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் இம்மாதம் 17 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளன. (உ-6)

## 3 பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்ற மாணவர் எண்ணிக்கை இவ்வாண்டு வீழ்ச்சி

(கொழும்பு)

பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள விபரமான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி கடந்த ஆண்டை விட இவ் வாண்டில் 3 பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

2001இல் ஆயிரத்து976 மாணவர்கள் 3 பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றிருந்தனர். ஆனால் இம்முறை ஆயிரத்து 927 பேரே 3 பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றிருக்கின்றனர் என்று பரீட்சை ஆணையாளர் அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மூலம் தோற்றிய ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 75 மாணவர்களில் 81 ஆயிரத்து 554 மாணவர்களும் தனிப்பட்ட முறையில் தோற்றிய 10 ஆயிரத்து 672 பேரும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மொத்தப் பரீட்சார்த்திகளில் இது44 சதவீதமாகும்.

பௌதிக விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் மிக கூடுதலான இஸட் ஸ்கோர் 2.9176ஐ கொழும்பு இந்துக் கல்லூரி மாணவன் வேதலிங்கம் ஜனார்த்தனன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு சுழற்சி முறைக் கடன்

(துன்னாலை)

கரணவாய் கிழக்குவிவசாய சம்மேளனம் ஊடாக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் 2இலட்சத்து 89 ஆயிரம் ரூபா சுழற்சிமுறைக் கடனாக அப்பகுதி விவசாயிகளுக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

கரணவாய் வேதாரணிஸ்வரவித்தியாலயத்தில்அண்மையில் இடம்பெற்ற சங்கப் பொதுக்கூட்டத்தில் வைத்து இச் சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட்டது.

மேட்டுநிலப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 350 விவசாய குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் இதனால்பயனடைந்துள்ளனர். (உ-41)


## அஞ்சலி

**திருமதி மீனாட்சி சிதம்பரப்பிள்ளை**

(ஓய்வு பெற்ற ஆசிரியை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி)

2002. 08. 03 அன்று சிவபதமெய்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி மீனாட்சி சிதம்பரப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் துணையோடு கல்லூரியின் சார்பில் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

(5814)

# மக்கள் மாண்பு



இலங்கை போக்குவரத்து சபையில் சாலைப் பரிசோதகராக கடமைபுரிந்த சிவ. ஆறுமுகசாமி அவர்கள் தமது 36 வருட சேவையின் பின் அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

வடபிராந்திய இந்துப் பேரவையின் அமைப் பாளரும், இந்து சமய அபிவிருத்தி மன்ற இணைப் பாளரும், விநாயகர் சமூக சேவைத் தலைவரும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஆயுட்கால உறுப்பினரும், இந்து இளைஞர் மன்றம், அருள் நெறிச் சமய சஞ்சிகையின் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வரும் இவர் பல சமயப் பெரியார்களின் அருள் ஆசியையும் பெற்றுள்ளார்.

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாக வும் கொண்டுள்ள இவர் சைவ சமய நூல்களையும் சமூக நலன் சார்ந்த பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார். சிறந்த சமய சமூக சேவையாளரான சிவ. ஆறுமுகசாமி அவர்கள் அண்மையில் தமது மணி விழாவை கொண்டாடியுள்ளார். இவர் அகில இலங்கை சமாதான நீதவான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

☼ ☼ ☼ ☼ ☼



நீர்கொழும்பு, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பஜனை இல்ல நிர்வாகியும், சிறந்த சமூக சேவை யாளருமான வீரசிங்கம் யோகரட்ணம் சமாதான நீத வானாக நியமனம் பெற்றுள்ளார்.

. இவர் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல. 91 சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கில் வசித்துத் தற்போது இல. 10 மன்சன் பிளேஸ், நீர்கொழும்பில் வசிப்பவருமாவார்.

பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாண வரும், உளளூராட்சி நிர்வாக சேவையைச் சேர்ந்தவருமான யோகரட்ணம் கொக்குவில் உப அலுவலகம், வலி. கிழக்குப் பிரதேசசபை, நீர்வேலி ஆகியவற்றின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராகவும், விசேட ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர், வடக்கு-கிழக்கு மாகாண ஓய்வூதியர் சம்மேளனத்தின் பிரதிநிதியுமாவார்.

☼ ☼ ☼ ☼ ☼



அம்பாறை மாவட்ட சமூக நலவாழ்வு அமைப்பின் ஸ்தாபகரும், இணைப்பாளரும், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவரும், சமூக சேவை நிறுவனங்களின் கூட்டமைப்புத் தலைவருமான 'சமூக ஜோதி' திரு. ச. செந்துராசா அண்மையில் லண்டன் பயணமானார்.

ஒக்ஸ்பாம் நிறுவனமானது இலங்கையில் உள்ள தமது பங்காளி அமைப்புகளிடையே சிறந்த அமைப்பாக அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பைத் தெரிவு செய்து லண்டனில் உள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் உலக மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாக ச. செந்து ராசாவை அழைத்துள்ளது.

யாழ். மாவட்டத்திலும், கிழக்கு மாகாணத்திலும் பல சமூக நிறுவனங்களை உருவாக்கிப் பயிற்சி அளித்து பல்வேறு பொறுப்புக்களை ஏற்று நடாத்தி வரும் இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

இவர் யாழ். அல்லையம்பதி சண்முகம் சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வராவர்.

☼ ☼ ☼ ☼ ☼



தென் புலோலி புற்றளையைச் சேர்ந்த இளைப் பாறிய அதிபர் எஸ். தர்மலிங்கம் நீதி அமைச்சினால் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப் பட்டு யாழ். மாவட்ட நீதிபதி ஆர். ரீ. விக்கினராசா முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பிரபல சமூக சேவையாளரான இவர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் 1950ஆம் ஆண்டு உதவி ஆசிரியராகத் தொழிலை ஆரம்பித்து 1959ம் ஆண்டு தொடக்கம் 1964ம் ஆண்டுவரை அக்கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றினார். பின்னர் பதவி உயர்வு பெற்றுக் கரணவாய் மகா வித்தியாலயத்திலும் தென் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திலும் 17 வருடங்கள் அதிபராகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயம், புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராகிய இவர் தென் புலோலி புற்றளைத் தமிழ் இளைஞர் கழகம், சனசமூக நிலையம், புலோலி கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் செயற் குழு உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார்.

☼ ☼ ☼ ☼ ☼



சுண்டிக்குளி, பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த திருமதி ஞானதீபம் இராசகாந்தன் அண்மையில் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் இப்பகுதி பொதுப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

☼ ☼ ☼ ☼ ☼



இலங்கை அரசினதும், உலக வங்கியினதும் அனுசரணையுடன் மனித வள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு படுத்தப்பட்ட இடைநிலை வகுப்புக்களில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவிற்கான புலமைப்பரிசில் பெற்ற கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கணித ஆசிரியை செல்வி துளசி மயில்வாகனம் இஸ்ரேல் நாட்டில் உள்ள ''கோல்டா மேயர், மவுண்காமல்'' சர்வதேச மத்திய பயிற்சி நிலையத்தில் மே மாதம் 26ஆம் திகதி தொடக்கம் யூன் மாதம் 14ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கல்விப் பயிற்சி நெறியில் பங்குபற்றி தற்போது நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையில் இருந்து 31 கணித ஆசிரியர்கள் பங்குபற்றிய மேற்படி பயிற்சி நெறியில் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு ஆசிரியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் நீர்வேலி மத்தியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் மயில்வாகனம் தெய்வநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

# கன்னியென மறைபேசும் ஆனந்த வல்லியாம் அன்னையை நன்மைபெற ஆடிப்பூரநாளில் கூடித் தொழுதிடுவோம்

## இன்று ஆடிப்பூர உற்சவநாள



''ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப் புகழ அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையுங் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூபமயிலே'' என்ற தாயுமான சுவாமிகள் சொன்ன ஞான வார்த்தைக்கமைய உமை யவள் அண்ட கோடிகளிற்கெல் லாம் தாயாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றாள். ஆடிப்பூரம் உமாதேவியாருக்கு விசேஷ மான தினம். எம்பிராட்டியின் சாமர்த்தியச் (ருதுசாந்தி) சடங்கு நிகழ்ந்த தினமெனக் கூறப்படும் பூரகர்மா உற்சவ தினம்தான் ஆடிப்பூரம். அம்பாள் ஆலயங் களிலும் சிவாலயங்களிலுள்ள அம்மனுக்கும் விசேட விழாவாக ஆடிப்பூரத் திருவிழா நடைபெறு கின்றது.

### நயினையில்

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பத்துத் தினங்கள் ஆடிப்பூரத் திருவிழா வாக நடைபெறுகின்றது. 02.08.2002 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி விஷேட அபிஷேகங் கள் பகல் மாலை இலட்சார்ச் சனை என்பன நடைபெற்று ஆடிப் பூரத் தினமான 11.08.2002 ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று காலை மூலமூர்த்தி அம்பா ளுக்கு 108 சங்காபிஷேகமும் எழுந்தருளி அம்பாளுக்கு நவோத்திர சகஸ்ர மஹா சங்கா பிஷேகமும் (1008 சங்காபிஷே கம்) நடைபெற்று அழகிய தாம ரைப்பூ வாகனத்தில் அம்பாள் ஆரோகணித்து வீதியுலாவரும் தெய்வீக அலங்காரக்காட்சியும் இடம் பெறுகின்றது.

### அடியவர் பார்வையில் அம்மை

''அண்ட கோடிகளெல் லாம் ஒரு தலையில் நீ சுமந் தருளுதலினால் அல்லவோ அம் புயப் பிரமன் படைக்கத் தொடங் கினான். அகிலமும் சிதைவுறா மல் புண்டரிகலோசனன்

நயினை
நா. கோபாலகிருஷ்ணன்

பாதுகாக்கின்றனன். புராந்தகன் சங்கரித்துப் புகழ் மருவுகின் றனன். இணங்கி நீ தயைபுரியா திந்தாயெனில் எண்டிசையும், கிரியும், கடலும் எப்படி நிலைத் திடும். எவ்விதத்தினில் அந்த மூவர் தொழில் ஈடேறும். ஈசன் அரவிந்த பாதத் தொண்டர்கள் சூழ் இலங்கை நயினாநகர் துதி செய்யும்படி அமர்ந்தோய் சுர லோக லோகேந்திரர் நரலோக புவனேந்திரர் தொழ வாழும் நாகேஸ்வரியே'' என்று தென் னிந்திய வீராச்சாமிச் செட்டியார் நயினை நாகேஸ்வரியை இறைஞ்சி வேண்டியுள்ளார். தாயுமான சுவாமிகள் அகி லாண்ட கோடி ஈன்ற அன் னையை கன்னியெனக் காண் கின்றார். பாம்பை அணிந்த பரமசிவன் பக்கத்தில் பாம்பால் பூசிக்கப்பட்டவள் நாகபூஷணி என்று ஈசனால் புகழப்பட்டவள். ஆரத்தை அணிகலனாய்க் கொண்டவள் என்பது தாயுமா னார் கண்ட எம்பிராட்டி.

நயினை நாகேஸ்வரி பதி கத்தைத் தந்த அராலி முத்துக் குமாருப் புலவர் ''நாகமணியும் பரமர் பாகமுறு மேக சிவ நாக ஈஸ்வரி அம்மையே!'' என்று அழைக்கின்றார். ''இறைவர் வலிய நெஞ்சை நடங்கொண்ட கொள்கை நயங்கொண்ட நாயகி நல் அரவின் படங் கொண்ட அல்குல் பனிமொழியே வேதப் பரிபுரையே'' என்கிறார் அபிரா மிப்பட்டர்.

தாயுமானசுவாமிகள் கண்ட பூரணி புராதனியை, அபிராமிப் பட்டர் சொன்ன நல்லரவின் படங் கொண்ட நாயகியை, வீராச் சாமிச் செட்டியார் கண்ட அண்ட கோடிகளைத் தந்த தாயை, முத்துக்குமாருப் புலவர் தரிசித்த திருக்கயிலைக் காட்சியாகிய் நாகமணியும் பரமர் பாகமுறு மேக சிவ நாக ஈஸ்வரி அம் மையை நயினையில் நாமும் காணுகின்றோம்.

### பத்துநாள் ஆடிப்பூர உற்சவம்

ஆடிப்பூர உற்சவ தினங் களில் எம்பிராட்டியை சிற்றாடை உடுத்த சிறுமியாக பிள்ளையும் கன்னியென மறை பேசுகின்ற கன்னியாக, அருள் அலையை அள்ளி வீசுகின்ற ஆனந்தக் குமரியாக, அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையாக, தாயேயாகி வளர்க்கின்ற தாயாக, அனைவ ருக்கும் உணவளிக்கும் அன்ன பூரணியாக சாந்தி சமாதா னத்தை நல்கும் சாந்த ரூபியாக நயினையில் வீற்றிருக்கும் அம் பிகையின் ஒரு நாள் உற்சவ மாக இருந்த ஆடிப்பூர உற்சவம் பத்துநாள் உற்சவமாக மாற்றப் பட்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நயினை அம்பாள் ஆலயத தில நடந்து முடிந்த வருடாந்த மகோற்சவத்தைத் தொடர்ந்து, நாளாந்தம் அம்பாள் உள்வீதி வலம் வரும் இந்த உற்சவம் நடை பெறுகின்றது. அவள் ஆட்டு கின்றாள். ஆட்டுவித்தால் ஆரரொருவர் ஆடாதாரே!



மூத்த பத்திரிகையாளர் திரு கோபாலரட்ணம் அவர்கள் ஐரோப்பா விற்கு வருகை தந்தபோது அவருக்கு ஜெர்மனியில் நடாத்திய பாராட்டு விழாவில், சங்கீத இசைக் கச்சேரியை நிகழ்த்திய சங்கீத ஆசிரியை திருமதி. கலைவாணி ஏகானந்தராசா அவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கிறார் திரு. எஸ். எம். கே. அவர்கள்.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கைப் பிரதிநிதிகளின் தலைவராக மார்கோ



ஐ. சி. ஆர். சி. இலங்கைப் பிரதிநிதிக் குழுவின் தலைவராக கடந்த 1999ஆம் ஆண்டு முதல் பணியாற்றிய திருமதி இஸபெல், இவ்வருடம் ஜூன் மாதத்துடன் தனது கடமையை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

1999இல் பதவியேற்ற இவர், தனது காலத்தில், இடம்பெயர்ந்த மக்களுக்கான அவசர உதவிகளை ஏற்பாடு செய்தமை, வன்னிக் குப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான மார்க்கங்களை மீள ஏற்படுத்தியமை,

எல்லைகளைத் தாண்டிப் பொது மக்கள் சென்று வருவதற்கு வழிகளைத் திறந்தமை ஆகிய பணிகளை மேற்கொண்டிருந்தார். இதேவேளை, இவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள மார்கோ புருடர்மான் கடந்த மாதம் முதல் தனது பணியைப் பொறுப்பேற்றுள்ளார்.

(உ)

## பெண் குத்திக்கொலை

(கொழும்பு)

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்யும் பெண் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அளுத்கமவைச் சேர்ந்த 36 வயதான மேற்படி பெண்ணை அவரது இரண்டாவது கணவர் எனக் கருதப்படும் நபரே தனி யான இடம் ஒன்றுக்கு அழைத் துச் சென்று கத்தியால் குத்திக் கொன்ற பின்னர் ஓடி ஒழிந்து விட்டதாக கூறப்படுகிறது. (உ)

## கவிக்கோ யாழ் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

தமிழகக் கவிஞர் பேரா சிரியர் கவிக்கோ அப்துல் ரஹ் மான் இம்மாதம் இறுதிப் பகுதி யில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

கவியரங்குகள் மற்றும் கருத்தரங்குகளில் இங்கு இவர் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-19)

## ஓய்வுபெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் தட் டெழுத்தாளராகப் பணியாற்றிய ஆ. ஆனந்தராசா தனது பணி யிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

(உ-19)

# பிறந்த திகதிக்கு . . .

செய்வதாலும் நெருப்பு சம்பந்தமான தொழிலாலும், சாப்பாட்டுப் பொருட்கள் சம்பந்தமான தொழிலாலும் வாகனம் பால் டண்ணை போன்றவைகள் மூலமும் பணம் சம்பாதிக்கின்றனர். ஆராய்ச்சி மனப் பான்மை கொண்ட இவர்கள் சணிதம் வானிலை, ஜோதிடம், தத்துவம் போன்றவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வர், பொதுவாக இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கும் பெயர் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் எத்துறையில் இருந்தாலும் அத்துறையில் சிறந்து விளங்குவர். இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் நெருப்புசம்பந்தமான தொழிலாலும், சாப்பாட்டுப் பொருட்கள், பால்பண்ணை, சோழிப்பண்ணை, வாகனம் பல் பொருள் வியாபாரம் போன்றவற்றாலும் பணம் சம்பாதிப்பர். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குத் தோல் வியாதிகளும், அரிப்பு சம்பந்தமான வியாதிகளும் வருவதற்கு வாய்ப்புண்டு. பெயரை நன்கு மாற்றி அமைத்துக் கொண்டால் நோய்கள் நீங்கி வாழலாம்.

பெயர் அமைக்கும் முறை

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சூரியனைக் குறிக்கின்ற ஒன்று எண்களில் பெயரை அமைத்துக்கொள்வது நல்லது. 19, 37, 46, 64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக்கொள்வதைப் போல் தான் செய்கின்ற வியாபார விலாசத்தையும் இந்த எண்கள் வருவது போல் அமைத்துக்கொண்டால் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்:- 1-3

யோகமான தேதிகள்:- 1, 10, 19, 28; 3, 12, 21, 30, 5, 14, 23; 9, 18, 27

யோகமான நிறம்:- வெளிர் மஞ்சள், வெளிர் நீலம், ரோஸ், ஒறேஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

யோகமான மோதிரக்கல்:- கனக புஷ்பராகம், எமிதிஸ்ட்

ஆகாத நிறம்:- கருப்பு, பச்சை.

ஆகாத தேதிகள்:- 8, 17, 26; 6, 15, 24.

உடல் எண்- 1 உயிர் எண்- 4

1, 10, 19 28 போன்ற தேதிகளில் பிறந்து தேதி மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 4 வந்தால் சுமாரான உயரமாகவும், அலைபோன்ற முடியுடையவராகவும் இருப்பார்கள். இரட்டை நாடியும், பார்ப்பதற்குக் கம்பீரமும் கொண்ட இவர்கள் எல்லாவிதமான விஷயங்களையும் தெரிந்து வைத்திருப்பார்கள். சிற்றின்பவிஷயங்களில் நாட்டம் அதிகமுள்ள இவர்கள் நேர்மையற் இன்பங்களை அனுபவிக்க ஆசைப்படமாட்டார்கள். பேசுவதின் மூலமும் எழுதுவதின்மூலமும் உலகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று எண்ணுவர். தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களைத் துடுக்காகவும் கூறுவர், பிறர் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுப் பதில் கூறாது இடையில் மறுத்துப் பேசுவர்.

நேர்மை

பிறர் கூறுவதை நம்பாமல் தீர விசாரித்தும் அதைப்பற்றி விவாதித்தும் தன்மனதிற்குச் சரியென்று தெரிந்தால் தான் ஒத்துக் கொள்ளுவர். நேர்மையாக வாழ ஆசைப்படும் இவர்கள் போலிகளை வெறுப்பவராவர். இதனால் நண்பர்கள் இவர்களை விட்டுப் பிரிய மாட்டார்கள்தனக்குப்பிடிக்கவில்லை யென்றால்யருக்கும் எவ்விதத் தீங்கும் செய்யாமல் ஒதுங்கிக் கொள்வர். இவர்கள் மிகுந்தபுத்திசாலித்தனமுடையவர்களாதலால் கதைகள் சாஸ்திரம். மதம், ஜோதிடம் போன்றவற்றிலும்அதிக நாட்டம் செலுத்துவர், எப்பொழுதும்பலவிஷயங்களைச்சேகரித்துக்கொண்டேயிருப்பர், நல்ல பேச்சுத்திறன்படைத்த இவர்கள் உத்தியோகம் பார்த்து கொண்டிருக்கும் போதே தொழில் செய்ய வேண்டும் என்று முயல்வர். இன்னும் சிலர் அரசியலில் பேச்சாளராகி உயர்வர்.

இவர்களுக்கு வாகனத்தாலும் இரும்பு, நெருப்பு உலோகம் சம்பந்தமான தொழில்களினாலும்லாபம்கிடைக்கும் ஆனால் மனம் எதையோ சிந்தித்துக் கொண்டேயிருக்கும். பிறருக்காக சிலவிஷயங்களில் தலையிட்டு மாட்டிக் கொண்டுவேதனைப்படுவதும் உண்டு தெய்வீக அனுக்கிரகம் உள்ளவர்களாதலால் எவ்வித ஆபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளுவர். எப்பொழுதும் பலர் இவர்களைச் சுற்றிக் கொண்டேயிருப்பர். பணவிஷயங்களில் நாணயமாக நடந்து கொள்ளும்இவர்கள் தலைமையைப் பலர்ஏற்றுக்கொள்வர். புகழ்ச்சியில் மயங்காதுஇருக்க வேண்டியது அவசியம். உத்தியோகத்திலிருப்பவரும்தனியாகத் தொழில் செய்பவரும் இந்த எண்ணிக்கையில் அதிகம் இருப்பதால், இதை ஒரு சிறந்த எண்ணாகக் கருத வேண்டும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கை சிறப்பாக அமையவில்லையென்றால், பெயர் பொருத்தமாக அமையவில்லை என்று தான் கருத வேண்டும். இதனால் பெயருக்கு கீழே குறிப்பிடப்படுவது போல் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

தொழில்

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்குப் பேச்சாலும், எழுத்தாலும்பொருள்சேரும் இரும்பு, உலோகம், நெருப்பு, போன்ற தொழில்களாலும், நான்குகால்சாமான்கள், வாகனம் போன்றவற்றாலும் பொருள் சேர்க்க யோகமுண்டு.

நோய்

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு உஷ்ணசம்பந்தமான அனைத்து நோய்களும்வரும். மூலவியாதி, இரத்த அழுத்தம், வாயு சம்பந்தப்பட்ட கோளாறுகள் வருவதற்கு வாய்ப்பிருப்பதால் முன்கூட்டியே இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். பெயரைப் பொருத்தமான எண்களில் மாற்றியமைத்துக் கொண்டாலும்நோய்கள் குறையும்.

பெயர்அமைக்கும் முறை

சூரியன்- ராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட எண்களிலும், பெயரைமாற்றி அமைத்துக் கொள்வது சிறப்பாகும். சூரிய ஆதிக்கமான 19, 37, 46, 64, 82 சுக்கிரனாதிக்மான 15, 24, 33, 42, 60, 63 போன்ற எண்களில் பெயரையோ அல்லது வியாபார விலாசத்தையோ வைத்துக் கொண்டால் நல்ல முன்னேற்றத்தைப் பெறலாம்.

பின்பற்றவேண்டியவை

யோகமான எண் 1-6

யோகமான தேதிகள்-1, 10, 19, 28; 6, 15, 24.

யோகமான மோதிரக்கல்-கனகபுஷ்பராகம், வெளிர் நீலக் கல்.

யோகமான நிறம்- மஞ்சள், வெளிர் நீலம்.

ஆகாததிகதிகள் 8, 17, 26

ஆகாத நிறம்- கறுப்பு - சிவப்பு.

(தொடரும்)

# ஈராக்கில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை பதவி கவிழ்ப்பது தொடர்பான விடயத்தில் அமெரிக்கா இன்னும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என ஈராக்கின் எதிர்க் கட்சிகள் அமெரிக்காவை கேட்டுள்ளன.

அமெரிக்க அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் ஈராக் எதிர் கட்சிகள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போதே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சதாம் ஹுசைனை பதவி கவிழ்க்கும் விடயத்தில் அமெரிக்கா எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர்கள் அமெரிக்காவை கேட்டுக்கொண்டனர்.

அதேவேளை, ஈராக்கின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி மாநாடு ஒன்றை கூட்டவுள்ளதுடன், இதன் மூலம் ஜனாதிபதிக்கு எதிராக பலம்வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்கி, ஜனநாயக ஆட்சி ஒன்றை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-8)

## அடுத்த மாதம் இந்தியப் பிரதமர் அமெரிக்கா விஜயம்

(புதுடில்லி)

இந்தியத்தலைவர்கள் சிலர் அடுத்த மாதமளவில் அமெரிக்கா செல்லவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதமமந்திரிஅடல்பிஹாரி வாஜ்பாய் துணைப் பிரதமர் எல் கே அத்வானி மற்றும் 3சிரேஷ்ட அமைச்சர்களும் மாநில முதலமைச்சர்களும் தனித்தனி விஜயங்களைமேற் கொள்ளவுள்ளனர்.

பிரதமமந்திரிஅடல்பிஹாரி வாஜ்பாய் அங்கு சென்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (உ-8)

## புனரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட கலாம் குஜராத் செல்வார்

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் மேற் கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் அங்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் கலாம் வெற்றியீட்டி ஜனாதிபதியாக பதவியேற்றபின் டெல்லிக்கு வெளியே மேற் கொள்ளவிருக்கும் முதற் பயணம் இதுவாகும்.

குஜராத் மாநிலத்தில் இந்து முஸ்லிம் மக்களிடையே நடைபெற்ற மதக் கலவரம் காரணமாக பாரியளவுஉயிர்ச் சேதமும் பொருட் சேதங்களும் ஏற்பட்டிருந்தமை தெரிந்ததே. (உ-8)

அரசியல் சாசன உரிமை கோரி

## பங்களாதேஷில் பழங்குடி மக்கள் ஆர்ப்பாட்டம்

(டாக்கா)

பங்களாதேஷின் பூர்வகுடியினர் தமக்கு சிறப்பான அரசியல் சாசன உரிமைகள் வழங்க வேண்டும் எனக்கோரி நேற்று முன்தினம் தலைநகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பங்களாதேஷின்ஜனாதிபதிகளாக தெரிவு செய்யப்படுவர்கள் அனைவரும் பழங் குடியினருக்கு அரசியல் சாசன ரீதியாக பாரபட்சம் காட்டிவருவதாகவும்,

இவ்வாறு பாரபட்சம் காட்டப் படுவதனால், பழங்குடியினரின் நாசரிக பண்பாட்டு அம்சங்கள் அழிந்து வருவதாகவும் குற்றம் சாட்டியே இவ்வார்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.

சுமார் 20 இலட்சம் பழங் குடிமக்கள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் கிறிஸ்தவ, பௌத்த சமயங்களை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## அரசியல் கைதிகள் 14 பேர் விடுதலை

(பர்மா)

மியன்மாரின் சமரசமுயற்சிகளின் முதற் கட்ட நடவடிக்கையாகமியார்மார் இராணுவ ஆட்சியாளர்கள் நேற்று முன் தினம் 14 அரசியல்கைதிகளை விடுதலை செய்துள்ளனர்.

மியான்மாரில் சமாதானம் ஏற்படுவதற்கு முன் நடவடிக்கையாக இராணுவ ஆட்சியாளர்களின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் அனைவரும் விடுதலை செய்ய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஆங்ஷாங் சூச்சி கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இராணுவ ஆட்சியாளர்கள் ஒரு தொகுதியினரை விடுதலை செய்துள்ளனர்.

இராணுவ ஆட்சியாளர்களினால்விடுதலை செய்யப்பட்டவர்களில் 6 பேர்எதிர்கட்சியானஜனநாயக தேசியலீக்கை சேர்ந்தவர்கள்.

மியான்மார் இராணுவ ஆட்சியாளர்கள்எதிர்க்கட்சித் தலைவியான சூச்சியை 19 மாதம் வீட்டுக்காவலில்வைத்திருந்து கடந்த மே மாதம் விடுதலை செய்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் தாதிமார் மரணம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் கிறிஸ்தவமிஷனறி வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் 3தாதிமார்உட்பட 4பேர் உயிரிழந்துள்ளதுடன், 20பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலின் சூத்திரதாரி ஒருவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார் என பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (உ-8)

## ஆப்கான் அலுவலகத்தில் குண்டுவெடிப்பு 20 பேர்பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்கு ஜெலனாபாத் நகரின் அருகில் நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுவெடிப் பொன்றில் 20 பேர் கொல்லப்பட்டதுடன் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜெலனாபாத் நகருக்கு அருகே பரோட்டா என்னும் இடத்தில் ஆப்கானிய கட்டுமான மற்றும் பணியியல் பிரிவு அலுவலகத்திலேயே இக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது.

சாலை கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வெடி மருந்துகள் இவ்வலுவலகத்தில் இருந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆனால் இது திட்டமிட்ட குண்டு தாக்குதல் என்று அப்பிரதேசத்தின் படைத்தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## ஒத்திவைத்த தேர்தல் செப்ரெம்பரில் நடக்கும்

வடக்குகிழக்கு மாகாணங்களில் ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலினை செப்ரெம்பர் மாதம் 25ம் திகதி நடத்துவதற்கு தேர்தல்திணைக்களம்ஆயத்தமாகி வருவதாக பிரதித் தேர்தல்ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் சட்டத்தின் படி வடக்கு - கிழக்கில் தேர்தல் இனிமேல் ஒத்திவைக்க முடியாது எனவும் தேர்தலை ஒத்திவைப்பதாயின் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் ஏனைய மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற போதிலும் வடக்கு-கிழக்கில் ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

பிறர்க்கு இன்னா முற்பகல்
செயின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்
குறள்

# வலம்புரி

## ஊடகங்களின் பாதுகாப்பு

மட்டக்களப்பில் தினக்கதிர் பத்திரிகை அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். ஊடகங்களின் சுதந்திரத்திற்கு என்று அச்சுறுத்தல்கள் வருகின்றனவோ அன்றிலிருந்து நாட்டில் அராஜகமும், அடாவடித்தனமும் நடப்பது சர்வசாதாரணமாகிவிடும். உலகம் முழுவதிலும் நடைபெறுகின்ற உரிமை மீறல்களையும், அடக்கு முறைகளையும் வெளிப்படுத்துகின்றஊடகங்கள்சுதந்திரமாக இயங்குவது அவசியமாகும். அதேவேளை அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதும் அவசியமாகும்.

ஊடகங்களின் சுதந்திரமும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுவதில் அரசு அக்கறைகாட்ட வேண்டும்.

இலங்கையைப்பொறுத்தவரை ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் கொண்டு வரப்பட்டபோதும் அவற்றின் அமுலாக்கம் எவ்வாறிருக்கிறதென்பதைத தினக்கதிர் பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவம் வெளிப்படுத்துகிறது.

ஒரு பத்திரிகை அலுவலகத்திற்குள் நுழைந்து அங்கிருந்தவர்களைத் தாக்கிவிட்டு, உடைமைகளைத்தீயிட்டும்,சூறையாடியும் சென்றுள்ளமை, ஊடகங்களுக்கு இருக்கின்ற அச்சுறுத்தல்களின் அடையாளங்களாகும். எனவே இது விடயத்தில் அரசாங்கம் இனரீதியாக நோக்காமல், நீதியோடு கூடிய விசாரணைகளை மேற்கொண்டு உரியவர்களை இனங்கண்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதனால் குற்றச்செயல்களும் அதிகரிப்பதோடு, குற்றச்செயல்களுக்கான தூண்டலாகவும் அது அமைகிறது.

எனவே எதிர்காலங்களில் ஊடகங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு, ஊடகங்களும் தமது பாதுகாப்பைப் பலப்படுத்த ஒன்று திரள்வது அவசியமாகும்.

ஊடகங்கள் தமது சுயலாபம் கருதி ஒன்றை ஒன்று நசுக்க முற்படும் போது மறுபுறத்தில்ஊடகங்களின் பாதுகாப்பும், சுதந்திரமும், பறிபோகிறதுஎன்றஉண்மையையும் உணர்வது அவசியமாகும்.

# உயிரளிக்கும் வார்த்தைகளால் வாழ்வு மலரும்

# நம்பிக்கையினால் சாதனைகள் ஏற்படுகின்றன

## பரமபிதா காட்டிய பாதை

**ஏ. பி. நிரோஜன்**



மனித வாழ்வின் அச்சாணியாக இருப்பது நம்பிக்கையாகும். நம்பிக்கையின் அடிப்படையில்தான் எல்லாச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மனிதன் தனித்து வாழ முடியாது. அவன் சேர்ந்தே வாழவேண்டியவன். அப்படிச் சேர்ந்து வாழும் போது,மற்றவர்களின் உதவியிலேயும் தங்கி வாழ வேண்டியவனாகின்றான்.தன்னை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவும்,மற்றவர்களைத் தான் ஏற்றுக் கொள்ளவும் ஒருவரை ஒருவர் நம்பியே ஆகவேண்டும். நம்பிக்கையின் அடிப்படையில்தான் கொடுக்கல் வாங்கல்களும், ஏன் உறவுகளும் கூடக் கட்டியெழுப்பப் படுகின்றன. நம்பிக்கையில்லையென்றால் நாளைய அல்லது எதிர்காலச் செயற்பாடுகளை நாம் திட்டமிடவோ செய்துமுடிக்கவோ முடியாது.

### கிறிஸ்தவ வாழ்வில் நம்பிக்கை

கிறிஸ்தவத்தின் முழுமைக்கு நம்பிக்கையே காரணமாக இருக்கின்றது. கிறிஸ்துவின் பிறப்பும், உயிர்ப்பும் கூட முழுநம்பிக்கையின் பாற்பட்டதே.இயேசு பிணிகளைக் குணமாக்குகின்ற போதும், அம் மக்களிடம் காணப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்களுக்குச் சுகம் கொடுக்கின்றார். கானானேயப் பெண்ணின் நம்பிக்கையைக் கண்ட இயேசு 'அம்மா உமது நம்பிக்கை பெரிது நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்' என்று கூறவே அவளின் பிள்ளை குணமடைந்தாள். இயேசுவை நம்புபவர்கள் வாழ்வடைவார்கள் இலாசர் இறந்த போது அங்கு வந்த இயேசு இலசரை உயிர்ப்பித்து இவ்வாறு கூறினார். 'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னில் நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்' (யோ 11:25) கிறிஸ்தவர்களின் விசுவாசம் இறப்பின் பின்பு நித்தியமான ஒரு வாழ்வு உண்டு என்பதாகும்.

### நம்பிக்கையின்மையால் சாதனைகள் ஏற்படாது

நடக்கும் என்பது நடக்காது என்பதும் அவரவர் கைகளிலே தான் தங்கியுள்ளது. அவநம்பிக்கை கொள்பவர்கள் எதிலும் வெற்றியை கண்டு கொள்ள மாட்டார்கள். தளர்ச்சியையும், ஏமாற்றத்தையும், விரக்தியையுமே அடிக்கடி சந்திப்பார்கள், இயேசுவின் சீடர்களும் ஒரு முறை கடலில் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த போது,நான்காம் சாமத்தில் இயேசு கடல்மீது நடந்து வந்தார். சீடர்கள் பயந்து ஐயோ பூதம் என்று அலறினார்கள்.இயேசு அவர்ளை ஆறுதல் படுத்தினார். இயேசுவைக்கண்ட பேதுரு தானும் இயேசுவோடு நடக்க விரும்பி நம்பிக்கையுடன் கடலில் நடந்தார்.இடையில்அவநம்பிக்கை ஏற்பட கடலில் மூழ்க,இயேசு கையை நீட்டித் தூக்கி 'நம்பிக்கை குன்றியவனே ஏன் ஐயம் கொண்டாய்'என்றார். (மத்: 14:31 )

### உலக வரலாற்றில் நம்பிக்கை

உலகியல் வாழ்க்கையிலும் நம்பிக்கையே சாதனைகளைக் குவித்திருக்கின்றது விடுதலையைச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. எம்மவர்களின் வாழ்வும் அந்த நம்பிக்கையை மையப்படுத்தியே இத்தனை வருடகாலப் போராட்டங்களின் மத்தியிலும் சளைக்காமல், சோர்வடையாமல் தனித்துவத்தை இழந்து விடாமல் உலகமே வியக்கும் வகையில் அடையாளப்படுத்தியுள்ளதுஇயேசுக்கிறிஸ்துவுடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தினாலே மீட்பு உண்டு என்பது கிறிஸ்தவர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை. அந்த மீட்பை முன்னெடுப்பதற்கு கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வே முக்கியமானதாகும். மீட்பின் பாதையைக் கண்டடைவதற்கு வாழ்வளிக்கும் வார்த்தையே நம்பிக்கை தருவதாகும்.உயிரளிக்கும் வார்த்தையாலே வாழ்வு பெறுவோம். கிறிஸ்து இயேசுவின் நம்பிக்கையாலே மீட்பைக் கண்டடைவோம்.

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து

# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

## சோதிட பலன்

**ஆர். ஐ. துரைமுருகர்**

(சென்ற வாரத் தொடர்ச்சி)
உடல் எண்-1உயிர்எண்-3

1,10,19,28ஆகிய தேதிகளில் பிறந்து தேதி, மாதம் வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர்எண் 3வந்தால் இவர்கள் சூரியன் குரு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவார்.இவர்கள ஓரளவு உயரமாகவும், லேசாகச் சுருண்ட முடியும்.நீண்ட புருவங்களை உடையவராகவும இருப்பர்,இளமையிலே சிலருக்கு வழுக்கை வந்து விடும். இவருடைய பிறந்த தேதிஎண்களுக்குப் பொருத்தமான தாகப் பெயர்அமைந்துவிட்டால் கல்வி, கேள்விகளிற் சிறந்து விளங்குவர்.எக்காரியங்களையும் நிதானமாகச் செய்து முடிப்பர். அமைதியாகவும் அன்பாகவும் பேசும் இவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்புடனே காட்சியளிப்பர்.அதிகமாகப் பேசாவிட்டாலும், தான் என்ன பேசுகின்றோம் என்பதைச் சிந்தித்துப் பேசுவர்.நாட்டின் முக்கியமான பொறுப்புகளை வகிப்பவர்கள இவர்களே; கணிதத்துறையில் திறமை கொண்ட இவர்கள் எதையும் முன் கூட்டியே கணிக்கும் ஆற்றல் கொண்டவர்கள்.தன்னை ஒருவர் பார்க்க வருகின்ற போதே. எதற்காக வருகின்றார் என்பதை முன்கூட்டி அறிந்து கொள்ளுவர்.

### சமயோசிதம்

சமயோசிதப் பேச்சும், யோசனை சொல்லும் ஆற்றலும் கொண்ட இவர்களைக் கண்டு அடுத்தவர்கள் மரியாதை கொடுப்பர்,இவர்களிடம் உள்ள ரகசியத்தை யாரும் தெரிந்து கொள்ள முடியாது இவருடன் இருப்பவரே இவரைப்புரிந்துகொள்ள முடியாது. தவிப்பர்.தனக்கு மேலேஉள்ளவர்கள்கொடுத்த வேலையைச் சிறப்பாகச் செய்து நல்ல பெயரெடுப்பர் தான் ஒருகாரியத்தில் இறங்கினால் அதுவெற்றி பெறும் வரை அதைப்பற்றி வெளியில் கூறமாட்டார்.

தனக்கு இலாபம் இல்லாத விஷயங்களிலும் தேவையற்ற காரியங்களிலும் ஈடுபடமட்டார்.ஒருகாரியத்தில் இறங்குவதற்கு முன் அதைப் பற்றித் தீர விசாரித்து அது வெற்றி பெறவாய்ப்புள்ளதா என்று சிந்தனை செய்து தலையிடுவர். மற்றவர்கள் இவரை மிகுந்த புத்திசாலி என்று போற்றுவர். பிறரை வேலை வாங்கும் திறமையும் ஒரு காரியத்தைச் சிறப்பாகச் செய்யும் ஆற்றலும் இயற்கையாகவே இவர்களுக்கு இருப்பதால் இந்த எண்ணிக்கைக் காரர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

சிறிய உத்தியோகத்திலிருந்தாலும், சிறிய தொழில்களைச் செய்தாலும் பொருத்தமானதாகப்பெயர் அமைந்துவிட்டால் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறுவர் அவ்வாறு பொருத்தமானதாக பெயர் அமையாவிடில் முன்னேற்றம் அவ்வளவு சிறப்பாக இருக்காது தன்னம்பிக்கை கொண்ட இவர்களில் சிலர் அரசியல் வாதிகளாகவும், இன்னும் சிலர் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் ,பலர் தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். நல்ல வாழ்க்கைத் துணைவரை அடைகின்ற இவர்கள் வீடு, நிலம், வாகன வசதிகள் பெற்றுச் சிறப்பாக வாழ்கின்றனர். ஆனால் இவர்களுக்குச் சுக்கிரன் ஆதிக்கம் கொண்ட 6 எண்களில் பெயர் வருகின்ற மாதிரி அமைந்து விட்டால் குடும்ப வாழ்க்கையில் சில குழப்பங்கள் ஏற்படும். இதனால் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை மாற்றிக் கொள்ளுவது மிக முக்கியம்.

### தொழில்

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்த இவர்கள் பல பொருள்களை வியாபாரம்

(8ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### மாயையை வெல்லுதல்

மலரில் உட்கார்ந்து தேனை உறிஞ்சி விட்டுச் சிறிதும் பாதிக்கப்படாமல் பறந்து செல்லும் தேனீ போல, நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இவ்வுலகில் வாழும் போது இல்லறத்தால் கேடுறாத படி நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் இல்லறத்தில் இருக்கலாம். ஆனால் இல்லறம் உங்களை ஆக்கிரமிக்க கூடாது. எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். மன அபிலாசைகளை உன்னிப்புடன் கவனித்து வர வேண்டும். கீர்த்தனைகளைப் பாடுதல், தன்னலமற்ற தொண்டு, விவேகம் மற்றும்வைராக்கியத்தை வளர்த்தல் போன்ற ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொண்டால் மாயையை எளிதில் வெல்லலாம்.

-சுவாமி சிவானந்தர்



யாழ். நகரில் மூடப்பட்ட வீதிகளைத் திறக்கக்கோரி, வலி தென் கிழக்கு வெகுஜன ஒன்றியம் நேற்று நடத்திய மறியல் போராட்டத்தின் சில காட்சிகளை படங்களில் காணலாம். (படம்: திருநீபன்)

# வலி - வடக்கு மக்கள் மீளக் குடியமர்வது உடனடியாகச் சாத்தியப்படமாட்டாது!

## அமைச்சர் மெலிந்த மொறகொட தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார மறு சீரமைப்பு விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் மெலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ, சமாதான சபைத் தலைவர் பேணாட் குணதிலக மற்றும் அமைச்சின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

குடா நாட்டில் அதி உயர் பாதுகாப்பு இராணுவப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்ந்து அவ்விடங்களை நேரில் அவதானிக்கவே அமைச்சர் குழுவினர் யாழ் வந்தனர்.

வலிவடக்கு மற்றும் தென்மராட்சிப் பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் பொது மக்களை மீளக் குடியமர்த்துவது உடனடிச் சாத்தியமாகாது என்று தெரிவித்த அமைச்சர் மெலிந்த.

இப் பகுதியில் மீளக் குடியமர்வது குறித்து சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஆராயப்படும் என்று தெரிவித்தார்.

அத்துடன் தென்மராட்சிப் பகுதியில், மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவ ரென்றும்,

கரம்பகம்,எழுதுமட்டுவாழ்,அம்பன், நாகர் கோவில் பகுதிகளில் உடனடியாக மக்களை மீளக் குடியமர்த்த முடியாது என்றும் கூறினார்.

இதேவேளை யாழ் பொது நூலகத்திற்கு முன்பாக அமைச்சர், பொது மக்களை சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பொது மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நிகழ்வில் அமைச்சரிடம், காணாமல் போன தமது உறவுகளை தேடித் தருமாறும், அவர்களின் நிலைமை என்ன என்றும, மீனவர்கள் பிரச்சினைகள் மற்றும் கல்வி, போக்குவரத்துப் பிரச்சினைகள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் நடை முறைப்படுத்தப் படாமை ஆகியன குறித்தும் பொது மக்களால் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் காணாமல் போனவர்கள் குறித்து ஆராய்ந்து முடிவைத் தெரிவிப்பதாகவும் கல்வித் தர நிலைமையை சீர் செய்ய உரிய நடவடிக்கைகளை பிரதமரிடமும் கல்வி அமைச்சருடனும பேசி விரைந்து நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார்.

இம் மக்கள் சந்திப்பு நிகழ்வில் பொதுமக்களுடன் தமிழர் கூட்டமைப்பு எம்.பிகளான அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,ந.ரவிராஜ் இராணுவ உயர் அதிகாரிகள், யாழ் மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-6-43)

---

### பிரதமர் ரணில்...

வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

பிரதமர் ரணிலின் சமாதான முயறசிகள் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டை விளக்குவதற்காக 13ம் திகதி செவ்வாய்க் கிழமை கூடவுள்ளது. இக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை அடிப்படையாக வைத்தே பிரதமருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பாராளுமன்றத்தை எக் காரணம் கொண்டும் கலைக்க மாட்டேன் என்று உறுதியாக கூறியிருப்பதும், சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கத் தயாராகவிருப்பதாகவும் கூறியுள்ளமை பிரதமருடனான நேரடிப் பேச்சுவார்த்தையின்போது ஒத்துப்போகும் தன்மையைக் காட்டுவதாக உள்ளதென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து இன்றைய அரசியல் நெருக்கடி நிலை குறித்தும், நாட்டின் பொருளாதார நிலை குறித்தும் உரையாடியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ம)

---

### உயர் பாதுகாப்பு...

அமைச்சர் மெலிந்த மொறகொட, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் தொல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் எஸ்.புண்ணியசீலன், யாழ் பிரதேச செயலர் எஸ். செந்தில்நந்தனன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் என். வேதநாதன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இராணுவ முகாம்களாக இருந்த இம் மூன்று பாடசாலைகளின் திருத்தம் மற்றும்புனர் நிர்மாணவேலைகளை உடன் ஆரம்பித்து பாடசாலைகளை உடனடியாக ஆரம்பித்துவைப்பதற்கு

---

### யாழ் பல்கலைக்கழகத்தில் சென்னப் பேராசிரியரின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறையின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை, காலை 10.30 மணிக்கு "சூழல் பிரச்சினைகளும் அவற்றைக் கையாளும் மாற்றுக் கொள் கைச் செயற்பாடுகளும்" என்ற விடயம் பற்றி சென்னைப் பேராசிரியர் செல்வி மைதிலி அவர்கள் கருத்துரை வழங்கவுள்ளார்.

புவியியல் துறை மண்ட பத்தில் நடை பெறும் இந் நிகழ்விற்கு துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமை தாங்குவார்.

ஆர்வலர்களை இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பொருளியல் துறைத் தலைவர் ப.சிவ நாதன் கேட்டுள்ளார். (ந)

---

### மூடப்பட்ட...

சிவஞானம், யாழ் மாவட்ட எம்.பி. எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மாநகர முதல்வர் செ.கந்தயன, ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் அணித்தலைவர் சுரேஸ் பிரேமச் சந்திரன், அகில இலங்கைத தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் குமரகுருபரன் முன்னாள் எம்.பி சிவமகாராஜா, பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்வி நிலைய மாணவர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் திரண்டிருந்து அமைதியான முறையில் மறியலில் ஈடுபட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

யாழ் நகரின் முக்கிய இரு சந்திகளில் இடம் பெற்ற இம் மறியலினால் சுமார் 2மணி நேரம் படையினரின் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாது முகாமுக்குள் முடங்கியது.

சுலோகங்களைத் தாங்கியவாறு மறியலில் ஈடுபட்டவர்களை படையினர் படமெடுக்க முற்பட்ட போது அவர்கள் கூச்சலிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி படமெடுப்பதை தடுத்தினர். எனினும் பின்னர் நிலைமை வழமைக்கு திரும்பியதையடுத்து படையினர் மீண்டும் படமெடுத்

---

பேச்சு நடத்தி வீதியைத்திறப்பது குறித்து இறுதி முடிவை தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இதேவேளை மறியல் போராட்ட முடிவில் எதிர்ப்புக் கூட்டமும் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், முதல்வர் செ. கந்தையன் மற்றும் சுரேஸ்பிறேமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினார்கள். (இ-6-19-41-43-59)

---

### தவறிவிட்டது

கடந்த 6ம் திகதி மினி பஸ்ஸில் பயணம் செய்த போது இருபாலைச்

---

### கண்காணிப்புக்குழுவின் தலைவரும் ஒஸ்லோ பயணம்

(கொழும்பு)

நோர்வேயின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் மேயர் ஜெனரல் டொன்புறு கெவ்டேயும் ஒஸ்லோ செனறுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடாபாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் வெளி விவகார அமைச்சர் கெல்கீசனைச் சந்திக்க நேற்று முன் தினம் நோர்வே சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ம)

---

### யாழ். நகரப்...

---

### பொ.ஐ.முன்னணி...

இதனை வலியுறுத் தும்வகையில இரு தரப்பினரும் செயற்படுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெ ழுப்ப தேசிய வழங்களை முழுமையாகப் பயன்படுத்தி திட்டங்களை முன்னெடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்விடயங்கள் குறித்து இரு கட்சிகளும் விரைவில் ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திடவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

---

### பேச்சுக்கான...

உடன்படிக்கை வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்

உடனடியாக ஆரம்பித்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ மேலதிக அரச அதிபரைக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை பாடசாலையைச் சூழவுள்ள மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக எந்த விதமான அறிவித்தல்களும் கிடைக்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

வழமைக்கு திரும்பியதையடுத்து படையினர் மீண்டும் படமெடுத்தனர்.

மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்த 512 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் விக்கிரமரட்னாயக்க மற்றும் படைத்தரப்பைச் சேர்ந்த எம்.எஸ்.ரூபசிங்க ஆகியோர் போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அங்கு நின்ற முக்கிய தலைவர்களுடன் கலந்துரையாடினர்.படை உயர் அதிகாரியுடன


கடந்த 6ம் திகதி மினி பஸ்ஸில் பயணம் செய்த போது இருபாலைச் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 6 1/2 பவுண் தங்கச் சங்கிலி தவறி விட்டது

கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சுப்பிரமணியம் - இராசம்மா
கேணிக்குள வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.


## யாழ். நகரப்...

இக்கலந்துரையாடலில் யாழ் நகர மேயர் செல்லன் கந்தையன, மினி பஸ் சங்கத் தலைவர் ஓட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர், போக்குவரத்து சபை ஊழியர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரதிநிதிகள் யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இதேவேளை யாழ். மத்திய பஸ் நிலையப்பகுதியைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகள் போடுவது தொடர்பாகவும் தனியாரின் வாடகைக்குரிய வாகனங்களை பஸ் நிலைய சுற்றாடல் பகுதியில் நிறுத்துவது குறித்தும் இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

கடந்த 8ம் திகதி யாழ்பஸ் நிலையதில் இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தை அடுத்து பகிஷ்கரிப்பு போராட் டத்தில்பஸ் ஊழியர்கள் ஈடுபட்டமையும் தெரிந்ததே (ம)

உடன்படிக்கை வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் குடியேறுவதற்கு வசதியாக அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை மீட்பதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது அங்கு புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளில் பல லட்சம வெடிகள் மீட்கப்பட்டுள்ளன ஏனையவையும் மீட்கப்படுவத்றகு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இக்கண்ணி வெடிகள் மீட்பதில் அரசு பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. யுத்தம் நடைபெற்ற போது கண்ணி வெடி களைப் புதைத்த இராணுவமும் புலிகளும் இறந்துள்ளனர் இதனால்அவற்றைக் கண்டு பிடிப்பது சிரமமாகவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இவ் வைபவத்தில் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் மாலிக் சமரவிக்கிரமா, மத்திய பிரதேச அபிவிருத்தித்துறை அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)


# சிறுவர்களுக்காகச் செயற்படுவோம்



பெரியவர்களே. . .!

கசிப்பு உற்பத்தி மற்றும் தேசவிரோத சிக்கல்களில் எங்களையும் ஈடுபடுத்தி, எமது வாழ்க்கையை வீணடிக்காதிர்கள். தயவு செய்து, எமது வாழ்வை வளம்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடாது போனாலும், எமது வாழ்வில் தடைகளினை உருவாக்கும் காரணிகளாக மாறி விடாதீர்கள்.

க. சாமிநாதன்
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

உங்கள் தொடர்புகளுக்கு
எங்கள் முகவரி

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021-2261 EXT.274



## மொழி பெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

தொடர்பு:-நேரில்

வலம்புரி
15, வெள்ளாந் தெரு,
(வைத்தீஸ்வராக் கல்லூரி
அருகில்)
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்.



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 11.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.